விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சிமெந்து ராம்கோ

# வலம்புரி
Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 12 சனிக்கிழமை (28.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

# பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது!

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கை மனித உரிமைகளை மீறுமானால் அந்த நாட்டில் பொதுநலவாய நாடுகளின் அமர்வை நடத்தக் கூடாது என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. பொதுநலவாய வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நிகழவுள்ள நிலையில் இந்தக் கோரிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ளது.**

பொதுநலவாய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை உள்ளடக்கிய பொதுநலவாய அமைச்சர் மட்ட நடவடிக்கைக்குழுவினர் மற்றும் பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஸ் சர்மா ஆகியோருக்கு இடையில் நேற்று நியூயோர்க்கில் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில் பொதுநலவாய அமைப்பு தமது மனித உரிமைகள் தொடர்பான கொள்கையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது என்று சர்வதேச மன்னிப்பு சபையின் ஆசிய பசுபிக் பிரதிப் பணிப்பாளர் பொலி ட்ரஸ் கொட் தெரிவித்துள்ளார்.

2009ஆம் இறுதிப்போரின் போது இலங்கைப்படையினரும் விடுதலைப்புலிகளும் போர்க் குற்றச சாட்டுக்களில் ஈடுபட்டனர்.

எனினும் இது தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு இலங்கை அரசாங்கம் இடம்தர மறுக்கிறது.

இந்த நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்து திரும்பிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை சர்வதிகாரத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளமையையும் சர்வதேச மன்னிப்புசபையின் ஆசிய பசுபிக் உதவ பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உச்சிமாநாடு இலங்கையில் நடத்தப் படுவதானது மனித உரிமை மீறல்களுக்கு அனுசரணை வழங்குவதாகும்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொதுநலவாய அமைப்பு இதுவரை அமைதியாக இருந்து வருவது வெட்கக்கேடானது.

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டை நடத்துவது மனித உரிமைகளை மீற இலங்கை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு ஈடானது.

இதனால் பொதுநலவாய நாடுகள் அமைப்பு தனது பொறுப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக மீண்டும் ஒரு முறை சிந்தித்து பார்க்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. (ஏ-11)

## முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்குத் தேவை

(மட்டக்களப்பு)

அரசாங்கத்தால் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸை வெளியில்போட முடியாது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும் கிழக்கு மாகாண அமைச்சருமான ஹாபீஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஏறாவூரிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

அரசாங்கத்தால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை வெளியில்போட முடியாது. அடுத்த ஆண்டு (2014) ஜனாதிபதித் தேர்தல் நடைபெறக் கூடிய சாத்தியம் இருக்கின்றது. அந்த தேர்தலுக்கு முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு முக்கியமாகும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ நடந்து முடிந்த மாகாண சபை தேர்தலில் சுமார் 53,000 வாக்குகளை பெற்றது. ஜனாதிபதி தேர்தலுக்கு சிறிலங்கா 19-ம் பக்கம் பார்க்க

## இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றுகிறார் சர்மா!

### மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா, இலங்கையின் மனித உரிமை பிரச்சினைகளை புறக்கணித்துவிட்டு, விமர்சனங்களில் இருந்து அந்த நாட்டை பாதுகாப்பதாக மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் மனித உரிமைகள் மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கு மதிப்பளிப்பது தொடர்பில் இலங்கையை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்களின் செயற்பாட்டுக்குழுக் கூட்டத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த இரண்டு சுயாதீனமான சட்ட அறிக்கைகள் சர்மாவிடம் கையளிக்கப்பட்டன.

கனேடிய அரசாங்கம் மற்றும் ஏனைய தரப்பினர் தயாரித்த இந்த அறிக்கைகளை சர்மா, உறுப்பு நாடுகளுக்கு கூட வெளியிடவில்லை. இந்த அறிக்கைகளில் ஒன்று கடந்த 8 ஆம் திகதி கசிந்தது. அந்த அறிக்கையில், 19-ம் பக்கம் பார்க்க

## மாவை எம். பிக்கு நீதிமன்றம் அழைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதி ராஜாவை எதிர்வரும் 02-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நேற்று உத்தரவிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் இலங்கைக்குள் தனி நாட்டை உருவாக்க முயற்சிக்கப் பட்டுள்ளது என்று அறிவிக்குமாறு கோரிஹாபாங 19-ம் பக்கம் பார்க்க

## ஜனநாயக வெற்றியை பாதுகாக்க வேண்டும்!

### அமைச்சர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் ஜனநாயக வெற்றியை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின்கடமை என கமத்தொழில் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன



தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மக்களுக்கு சமாதானத்தை பெற்றுக்கு கொடுத்ததால் தெளிவாக அவர்களால் வாக்களிக்க முடிந்தது.

வடக்கில் தீவிரவாத மற்றும் பிரிவினைவாதத்தை தோற்கடித்து பெறப்பட்ட இந்த ஜனநாயக வெற்றியை பாதுகாக்க வேண்டியது எமது கடமை.

வடக்கு மாகாண சபையினால் இலங்கையின் எதிர் காலத்தில் தெளிவான 19-ம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர் படகுகளை பறிமுதல் செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடகடலில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள காரைக்கால், நாகபட்டினம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 34 இந்திய மீனவர்களின் 5 மீன்பிடி படகுகளையும் பறிமுதல் செய்யுமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த யூலை மாதம் 31 ஆம் திகதி வடபகுதி கடலில் கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள் செப்டெம்பர் மாதம் 6 ஆம் தேதி பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனாலும் அவர்களின் படகுகள் அவர்களிடம் கையளிக்கப்படவில்லை. படகுகள் தொடர்பாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இலங்கைக் கடற்பகுதிக்குள் மீனவர்கள் 34 பேரும் அத்துமீறி பிரவேசித் திருந்தார்கள் 19-ம் பக்கம் பார்க்க

## இனவாதம் தூண்டப்படும் போது அரசு மௌனமாக இருக்கிறது

### முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் சிலர் இனவாதத்தைத் தூண்டும் சந்தர்ப்பங்களில் அரசாங்கமும் பொலிஸாரும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால பண்டாரநாயக்க குடும்பம் இனவாதத்தைத் தூண்டவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, அத்தனகல்ல தேர் 20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிளிநொச்சி ரயிலில் சீனாவின் பெட்டி!

## கோபத்தில் இந்தியா

இந்திய அரசின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஓமந்தை முதல் கிளிநொச்சி வரையான ரயில் பாதையில் முதல் பயணத்தின் போது சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டி பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் இந்திய அரசின் பிரதிநிதிகள் அதிருப்தி வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய ரயில் பாதையில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டி பயன்படுத்தப்பட்டுள்ளதா என இந்திய அதிகாரிகள் ரயில் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் விசாரித்துள்ளனர்.

திணைக்களத்திற்கு சொந்தமான ரயிலில் தமது பெட்டி ஒன்று பயன்படுத்தப்படாமையானது தமக்கு ஏற்பட்ட அவமானம் என இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும் முதல் பயணத்தில் முக்கியஸ்தர்கள் பயணித்ததால் குளிரூட்டப்பட்ட பெட்டியொன்றை பயன்படுத்தும் தேவை ஏற்பட்டதாகவும் திணைக்களத்திடம் சீனாவில் தயாரிக்கப்பட்ட பெட்டிகளே இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை ஏற்காத இந்திய அதிகாரிகள் இந்தியாவினால் தயாரிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட ரயில் பெட்டியை பயன்படுத்துவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

கிளிநொச்சி செல்லவிருந்த பல இந்திய அதிகாரிகள் இந்த பிரச்சினை காரணமாக ரயில் பயணத்தை மேற்கொள்ள முடியாது என அறிவித்ததாக கூறப்படுகிறது.

### எரிகாயங்களுக்கு உள்ளானவர் சிகிச்சை பலனின்றி மரணம்

தீயில் எரிந்து கடந்த 23 நாட்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று அதிகாலையில் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணம் அடைந்துள்ளார்.

மல்லாகம் கட்டுவனைச் சேர்ந்த இளையவி சிறிதரன் (வயது 58) என்பவரே சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணம் அடைந்தவராவார்.

மல்லாகம் கட்டுவன் வீதியில் உள்ள ஆலயத்தின் கும்பாபிஷேகத்திற்காக கிணற்றில் இருந்த ஆலமரத்தை எரித்து துப்புரவாக்க முற்பட்ட வேளையில் அருகில் உள்ள பற்றைக்கும் தீ வைக்கப்பட்டது. அதன்போது மண்ணெண்ணெய் என நினைத்து ரின்னரை எரியும் நெருப்பில் ஒருவர் தவறுதலாக ஊற்றியுள்ளார்.

அதன்போது இவர் எரிகாயங்களுக்கு உள்ளாகியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (எ-11)

### மின்சார சபையின் விளையாட்டுப் போட்டி

இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் ஒன்றுகூடல் வைபவமும் விளையாட்டுப் போட்டியும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் ப.செந்தில் செல்வன் தலைமையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கத்தின் போசகரும் இலங்கை மின்சார சபை வடமாகாண பிரதிப் பொது முகாமையாளருமாகிய டி.கே.பி.யு.குணதிலகவும் அவரது பாரியாரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (எ-11)

### விவசாயிகளுடன் அவசர சந்திப்பு

(கிளிநொச்சி)

இரணைமடுவிலிருந்து குடிநீர் விநியோகம் தொடர்பில் கிளிநொச்சி விவசாயிகளுடனான அவசர சந்திப்பு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கரைச்சி பிரதேசசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கமக்காரர் அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள் மற்றும் புத்திஜீவிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அறிவித்துள்ளார். (எ)

## மரண அறிவித்தல்



### வையித்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வையித்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை (கிருஷ்ணாரதம் உரிமையாளர்) நேற்று முன்தினம் (26.09.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வையித்திலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி-நாகம்மா தம்பதியரின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் குணபாலா, சந்திரபாலா, சுசீலாதேவி, வசந்தி, தனபாலா, காலஞ்சென்ற ஜெயபாலா மற்றும் சசிகலா ஆகியோரின் தகப்பனும் தங்கமணி, பஞ்சதேவி, கலியுகவரதன் (வரதன்), இரத்தினசிங்கம், சசிலேகா, கதிர்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

த்னுஷன், சிந்துஜா, சரண்ஜா, ஜெயமாறன், கவாஸ்கர், அகிபன், ஜெனார்த்தன், சஜித்தன், பவதாரணி, திலக்ஷன், கல்ஷிகா, கபிலஜா, சசிரன், ஜெயந்த, சசிந்த, றக்ஷனா, யாதவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகள் முற்பகல் 11 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி.கே.தனபாலா (மகன்)
கிராம அலுவலர்

"சசி பவனம்",
சுதுமலை தெற்கு.

(4046)

# யாழில் தனிச்சிங்களத்தில் தேசிய அடையாள அட்டை

வட மாகாண சபைத் தேர்தலையொட்டி தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கும் முகமாக நடமாடும் சேவை ஒன்று நடைபெற்றது.

இதில் விண்ணப்பித்தவர்களில் பலருக்கும் தனிச் சிங்களத்தில் மட்டும் விபரங்கள் எழுதப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறு தனிச்சிங்களத்தில் மட்டும் விபரங்களை உள்ளடக்கிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றவர்கள் அதில் உள்ள விபரங்களை அறியமுடியாமல் இருப்பதுடன் அதிலுள்ள விபரங்கள் சரியா அல்லது பிழையா என தெரியாத நிலையிலும் திண்டாடுகின்றனர்.

இத்தகைய தேசிய அடையாள அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் தமது விபரங்கள் அடங்கிய கோரிக்கை கடிதத்தையும் மற்றும் தேசிய அடையாள அட்டைக்கான மூன்று படங்களையும் கிராம அலுவலர்கள் ஊடாக மீள அனுப்பி குறிப்பிட்ட தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக, தமிழ், சிங்கள மொழிகள் அடங்கிய விபரங்களுடன் தேசிய அடையாள அட்டையை மீளப் பெற முடியும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(எ-11)

# ஆளுநரை நியமிப்பது ஜனாதிபதியின் விருப்பம்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு உட்பட சகல மாகாணங்களுக்கும் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு அமையவே ஆளுநர் நியமிக்கப்படுவார் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போர்க்குற்றவாளி இல்லை என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்கள் மத்தியில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

வடக்கில் ஆளுநராக இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

வடக்கு உட்பட சகல மாகாணங்களுக்கும் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு அமையவே ஆளுநர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இராணுவ அதிகாரியை நியமித்துள்ளதாக இவர்கள் கூறுகின்றனர். அப்படியானால் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இவர்கள் யாரை ஜனாதிபதியாக்க முயற்சித்தனர். அவர் இராணுவ அதிகாரி இல்லையா? அவர் நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி என்பதுடன் யுத்தத்தை வழிநடத்தியவர்.

போர்க்குற்றங்களுக்கு கட்டளையிட்ட நபர். ஆனால் அவர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டார் என்று நாங்கள் கூறமாட்டோம்.

சரத் பொன்சேகா நாட்டுக்காக சேவை செய்தார் என்றே நாங்கள் நினைக்கின்றோம். நாங்கள் அந்த நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கின்றோம் என்றார். (எ-11)

# ஈரான்-இலங்கை நட்பு வலுவான நிலையில்

(கொழும்பு)

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்து வரும் நட்புறவான தொடர்புகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல இலங்கை எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஈரான் ஜனாதிபதி ஹசன் ரொஹானிக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நியூயோர்க்கில் இடம்பெற்ற இருத்தரப்பு பேச்சுவார்த்தையின் போது அவர் இதனை கூறியுள்ளார்.

மூன்று தசாப்த கால மோதலுக்கு பின்னர், தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றியமை, மோதல் நடைபெற்ற பிரதேசத்தில் தேர்தல் நடத்தப்பட்டமை உட்பட பல விடயங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஈரான் ஜனாதிபதிக்கு விளக்கியதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(எ-11)


**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் விசேட பொதுக்கூட்டம்**

நாளை 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இந்து மத குருமார்களுக்கான பொதுக்கூட்டம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் உள்ள தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைத்து குருமார்களையும் இந்துமத குருமார் ஒன்றிய எழுத்தாளர் அவை உறுப்பினரையும் ஸ்ரீமாத மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினரையும் பிரம்ம கான சபா உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சிறிகாந்த குருக்கள்.

சர்வதேச குருமார் ஒன்றியம்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(சி-4935)

**பிள்ளையார் இன்**

இன்று முதல் அதி விசேட விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :
தோசையும் மசாலாத் தோசையும் உருளைக்கிழங்கு கறியுடன் 80/-
பூரி, சப்பாத்தி, உருளைக்கிழங்கு கறியுடன் 80/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4932)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

(4037)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.


934

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகள்

ஒரு தகப்பனார் தன்னுடைய பையனைப் பார்த்து "நீ எப்பொழுதும் புத்திசாலியான பிள்ளைகளுடன்தான் சிநேகிதம் வைத்துக் கொள்ள வேண்டும். அது தான் நல்லது" என்றார்.

உடனே அந்தப் பையன், "நீங்கள் சொல்வது சரிதானப்பா... ஆனால், என்னைவிட மோசமான பையன்களுக்கு மத்தியில் ஒரு புத்திசாலி தேவை அல்லவா! அதுதான் நான் அந்தப் பையனாக இருந்து விட்டுப் போகிறான்!" என்றான்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்தக் காலத்துப் பிள்ளைகளிடம் வாயைக் கொடுத்துவிட்டால் அதிலிருந்து மீள்வது கஷ்டம்!

சின்னப் பிள்ளைகளிடமுள்ள இந்த புத்திசாலித் தனத்தை பெற்றவர்கள் தூண்டிவிட வேண்டும்! அதை மழுங்கடித்து விடக்கூடாது. இளேடிஸ் கார்டனர் என்று ஒரு குழந்தை உளவியல் நிபுணர் அமெரிக்காவில் இருந்தார். அவர் என்ன சொல்கிறார் என்றால்...

குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவுக்கு அனுமதிக்காததுதான் நல்லது என்கிறார். உங்கள் குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால் உடனே நீங்கள், "முளைத்து மூன்று இலை விடவில்லை... அதற்குள் உனக்கு இவ்வளவு திமிரா?" என்று கேட்கக்கூடாது.

சின்ன வயதில் பெரியவர்களை எதிர்த்துப்பேச வெளிக்கிட்டால் பின்னர் அந்தக் குழந்தை கெட்டுப் போய்விடும் என்று நினைப்பது தவறு! அப்பாவுக்கு தெரியாத கணக்கை பிள்ளை சரியாகச் செய்து விடுகிறான்.

உடனே அப்பா அது தனக்கு அவமானம் என்று நினைக்கக் கூடாது! அதைவிட பெரிய அவமானமெல்லாம் தாங்கிக் கொள்பவருக்கு பிள்ளை செய்தது தான் பெரிய அவமானமா? நமது பிள்ளை நம்மை விட புத்திசாலியாக இருக்கிறானே என்று நினைத்து பெருமைப்பட வேண்டும்.

குழந்தை ஏதாவது உங்களிடம் சொல்ல விரும்பினால் அதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்க வேண்டும். அது தான் செய்த ஒரு காரியத்துக்கு அல்லது செய்யப்போகும் ஒரு காரியத்துக்கு என்ன காரணம் சொல்கிறது என்பது பரிவோடு கேட்க வேண்டும்.

சின்னப்பிள்ளை ஏதோ விளையாட்டுத்தனமாக பேசுகிறது என்று நினைத்துக்கொண்டு வேறு எங்கையோ கவனமாக இருக்கக் கூடாது.

ஒரு பையன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனது அம்மா வந்து கூப்பிடுகிறார். "தம்பி... இங்கே வா... கடைக்குப் போக வேண்டும்" என்று சொல்கிறார். பையன் விளையாட்டில் ஏதோ ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறான். "கொஞ்சம் இரும்மா... இன்னும் கொஞ்ச நேரத்தால் சென்று வருகிறேன்!" என்கிறான்.

இந்தச் சமயத்தில் அம்மா விட்டுக்கொடுக்க வேண்டும். கோபப்படக்கூடாது. இப்பொழுது கடைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தினால் அந்தக் குழந்தைக்கு ஏமாற்றம்– கோபம்– வெறுப்பு எல்லாம் வந்துவிடும். இது நல்லதல்ல.

அதனால் குழந்தைகளுக்கு நியாயமான பேச்சுரிமையை கொடுக்க வேண்டியது அவசியம் என்று குழந்தை உளவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். பிள்ளைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்குப் பதில் தெரியவில்லை என்பதற்காக அப்பாக்கள் கோபப்படக்கூடாது.

ஒரு பையன், அவன் அப்பாவைப் பார்த்து, "அப்பா ஒரு கல்லை கையிலிருந்து போட்டால் அது ஏன் தரையில் விழுகிறது?" என்றான். புவியீர்ப்பு சக்திதான் அதற்குக் காரணம் என்றார் அப்பா.

"இந்த சக்தி ஏன் மேலே இழுக்கக்கூடாது? எதற்குக் கீழே இழுக்கிறது?" என்றான் பையன். அப்பா பார்த்தார் "ஒரு அவசரமான வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டு போய்விட்டார். ஒரு வாத்தியார் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "மாணவர்களே! இந்த உலகம் ஒரு நாள் அழியப் போகிறது. எரிமலை குமுறப் போகிறது. வானம் இடிந்து விழப்போகிறது" என்று அடுக்கிக் கொண்டே போனார்.

இதைக் கேட்ட ஒரு பையன் பொறுமையாக எழும்பி, "சேர் அன்றைக்கு பாடசாலை உண்டா சேர்?" என்று கேட்டானாம்! அவனுடைய சந்தேகம் அவனுக்கு!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# ஆளுநரால் மேற்கொள்ளப்பட்ட அதிபர் இடமாற்றத்திற்கு இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாணஆளுநர்ஜிஏ.சந்திரசிறியினால் மேற்கொள்ளப்பட்ட அதிபர் இடமாற்றத்திற்கு யாழ்.மேல் நீதிமன்றத்தினால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யா/இமையாணன் அ.த.க. பாடசாலையிலிருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு மேற்கொள்ளப்பட்ட அதிபர் இடமாற்றத்திற்கே இவ்வாறு யாழ். மேல் நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு ஏற்கனவே அதிபர் இருக்க அக் கல்லூரிக்கு வேறொரு அதிபர் வடக்கு மாகாண கல்வியதிகாரிகளினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் புதிய அதிபர் நியமனம் தொடர்பில் ஏற்கனவே இருந்த அதிபருக்கு எவ்வித தகவலும் வழங்கப்படாத நிலையிலேயே நியமனம் இடம்பெற்றுள்ளது. இம்முறைகேடான அதி பர் நியமனம் தொடர்பில் பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன்புரிச் சங்கங்களினால் யாழ். மேல் நீதிமன்றில் கடந்த 12 ஆம் திகதி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ் அதிபர் நியமனம் தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில் வழக்கு தொடர்பான கட்டளை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கரால் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதில் ஆவணி 13 ஆம் திகதி இடம்பெற்றுள்ள அதிபர் நியமனம், புரட்டாதி 23 ஆம் திகதியன்று நடைமுறையில் உள்ள நியமனத்தை இரத்துச் செய்ய வேண்டும். இப் புதிய அதிபர் நியமனம் அரசியல் பின்புலங்களை கொண்டது என்ற மனுதாரர் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது என இந்தமன்று கருதுகின்றது.

நியமன ஆவணத்தில் ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய என்று குறிப்பிடப்பட்டுள்ளமையானது அழுத்தத்தின் காரணமாகவே இடம்பெற்றுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

ஆகையால் இவ் அதிபர் நியமனத்துக்கு இடைக் காலத் தடை விதிக்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது என்கிறார்.

இவ் வழக்கில் எதிர் மனுதாரர்களாக புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், வடமாகாண கல்விப் பணிப்பாளர், வட மாகாண கல்வி அமைச்சின் செயலர், வடமாகாண ஆளுநரின் செயலர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ் வழக்கில் மனுதாரர்கள் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் குறித்த நியமனம் அரசியல் பின்புலங்களைக் கொண் டது எனவும் அதனை இடைநிறுத்துமாறும் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எதிர்மனுதாரர் வழக்கின் ஆட்சேபனையை தெரிவிப்பதற்காக வழக்கு மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர்மாதம் 14 ஆம் திகதியன்று எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. மேலும்இந் நியமனம் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# முள்ளியவளை பெருந்தெரு வீதியை புனரமையுங்கள்

முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தின் வடக்குப் பக்கமாக ஆரம்பித்து முள்ளியவளை வற்றாப்பளை அம்மன் சந்தி வரை அமைந்துள்ள 800 மீற்றர் வரையான நீளமான மணற் பாங்கான வீதி பாவனைக்குட்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்தயுத்த இடப்பெயர்வின்போது வீதி அகழப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த வீதி பலத்த இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதோடு ஆழமாக்கப்பட்ட வீதியில் நீர் ஊற்றெடுப்பதனால் வீதி சகதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந் நிலையில் குறித்த பகுதியில் வாழ்ந்து வரும் 30 வரையான குடும்பங்கள் இவ் வீதியை பயன்படுத்துவதில் பெரும் இடர்களை சந்தித்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் வற்றாப்பளை அம்மன் பொங்கல் உற்சவ காலத்திலும் காட்டு விநாயகர் ஆலய பொங்கல் உற்சவ காலத்திலும் அநேக மானவர்கள் பயன்படுத்தும் குறித்த வீதியின் நிலை இவ்வாறு மோசமடைந்து இருப்பதால் இவ் வீதியை புனரமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் கிராம மட்டத்திலும் சமூக பிரதிநிதிகளிடமும் எடுத்துக் கூறியும் இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் மனவேதனை அடைகின்றனர். தற்போது இவ் வீதியின் புனரமைப்புத் தேவை குறித்து அமைச்சர்களான பசில் ராஜ பக்ஷ, றிசாத் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 |
| தக்காளி | 120 | 80 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 50 | 60 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 100-110 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 60 | 100 |
| பாகற்காய் | 110 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 100 | 60 | 100 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 110 | 160 |
| போஞ்சி | 100 | 90 | 140 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 30 |
| தேசிக்காய் | 550 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 35-45 |
| இராசவள்ளி | 80 | 60 | 120 |

# இராசி பலன்

*28.09.2013*
*(புரட்டாதி 12, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் 5.59 மணிக்கு*
*நவமி பின்னிரவு 1.03 மணிவரை*
*திருவாதிரை காலை 6.27 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*

**மேடம்** விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், சகோதர ஒற்றுமை பலப்படும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இடபம்** மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சியான செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பர், குடும்பத்தில் குதூகலம் ஏற்படும், நிதிநிலை உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், காணமற்போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தூரத்து உறவினரின் வருகையுண்டு, செலவுகள் அதிகரிக்கும், அம்பிகை வழிபாடு இன்பம் தரும், இடமாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** பொன்னான நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** தொழில் நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கனிவாகப்பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், ஆன்றோர் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மனதிற்கு அச்சமான நிலை தோன்றலாம்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புகளைப் பெறுவீர்கள், தேக நலனில் கவனம் தேவை, உறவினர்களால் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், உறவினர்கள் சிலரை தேடிச்சென்று சந்திப்பீர்கள்.

**மகரம்** உற்றார், உறவினர் உதவி செய்ய முன்வருவர், ஆரோக்கியம் சீராகும், சுவாரஸ்யமான நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்தோடு பணி புரியும் நாள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், தூர தேசச் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், தாயின் உடல் நலம் சீராகும், சஞ்சலங்கள் கூடும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

வளவன்

# வடமராட்சி கிழக்கு கடலில் சட்டவிரோத மீன்பிடி

## தென்னிலங்கை மீனவர்கள் அடாவடி

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சட்ட விரோத மான முறையில் தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக பிரதேச கடற்றொழி லாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தின் சுண்டிக்குளம் பகுதியில் தங்கி நின்று கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்ற தென்னிலங்கை மீனவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி வடமராட்சி கிழக்கு கடல் முழுவதும் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுருக்கு வலைகளைப் பயன்படுத்துவதனால் மீனினங்கள் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள் ளதாக பிரதேச மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தென்னிலங்கை மீனவர்கள் இப்பகுதிக்கு கடலட்டை பிடிப்பதற்கு மட்டுமே அனுமதி பெற்று வந்தனர் எனக் கூறப்பட்டது.

ஆனால் இம் மீனவர்கள் தற்போது தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடி யில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் கடலட்டை பிடிக்கும் கடற்றொழிலா ளர்கள் இரவு வேளைகளில் சிலிண்டர் பயன்ப டுத்தும் போது ஏற்படும் வெளிச்சங்களினால் ஆழ்கடலிலுள்ள மீன்கள் கரைக்கு வராமலிருக் கின்றன.

இதனால் தமது தொழில் வளம் பாதிப்படை வதாக பிரதேச மீனவர்கள் கவலை வெளியிட் டுள்ளனர். எனவே இப்பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்டோரிடம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (அ-9-64)




# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் அனுகூலங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத் தவர்களுக்கான மாதாந்த அங்கத்துவ கட்டணம் 50 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளதுடன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் அனுகூலங்களும் அதிகரிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேலும் இவ் அதிகாரிகள் தொடர்பில் விருப்புத் தெரிவிக்கும் படிவம் அங்கத்தவர்க ளுக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் படிவம் கிடைக்கப் பெற்ற அங்கத்தவர்கள் அதனை பூர்த்தி செய்து தமது பிரதேச செயலக பிரிவுச் சங்கங்களின் செயலாளர்களிடம் ஒப்படைக்கு மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மானியம் மற்றும் கொடுப்பனவு அதிகரிப்புகளின் படி தற்போது ஒருவருடத் துக்கு ஆயிரத்து 200 ரூபா வீதம் 7 வருடத் திற்கு வழங்கப்பட்ட இறப்பு மானியம் வருடத் திற்கு ஆயிரத்து 700 ரூபாவாக உயர்த்தப் பட்டுள்ளதுடன் ஒவ்வொரு வருடத்திற்குமான அதிகரிப்பு வீதம் 100 ரூபாவிலிருந்து 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை கொடுப்பனவாக நாளு க்கு 200 ரூபா வீதம் 10 நாட்களுக்கு வழங் கப்பட்ட கொடுப்பனவு நாளுக்கு 250 ரூபா வாக 15 நாட்களுக்கு வழங்கப்படவுள்ளது.

கண்சிகிச்சைக்காக ஒரு கண்ணிற்கு 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் இருகண்களுக்கும் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு 8 ஆயிரம் ரூபாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அங்கத்தவர்களின் பிள்ளை களின் பல்கலைக்கழக தகுதி பெற்றமைக்கான கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபாவாகவும் கடன் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இதயம், சிறு நீரகம் மற்றும் மூளை சத்திர சிகிச் சைகளுக்கு 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# மக்களை ஏமாற்றி கணனி திருடிய நபர்

(புன்னாலைக்கட்டுவன்)

மயிலங்காடு, ஏழாலைப் பகுதிகளில் கணனி மற்றும் தொலைக்காட்சி என்பனவற்றை திருத்துவதாக ஏமாற்றி அவற்றின் உதிரிப் பாகங்களையும் பணத்தையும் நுட்பமான முறையில் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வரு வதாவது,

மயிலங்காடு ஏழாலைப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு சென்ற குறித்த நபர், பழுதுபட்ட கணனி இருந்தால் திருத்தி தருவதாக கூறி யுள்ளார்.

இதனை நம்பிய வீட்டார் திருத்துவதற்காக அந்த நபரிடம் கணனியை கொடுத்துள்ளனர். கணனியை முற்றாக கழற்றி அதனுள் இருக் கும் பெறுமதியான கணனி பாகங்களை எடுத்த நபர் இவற்றை யாழ்ப்பாணத்தில்தான் திருத்த வேண்டுமெனவும் அதற்காக 2 ஆயிரம் ரூபாவை தருமாறும் கூறி, பணத்தை பெற்றுக் கொண்டதுடன் தனது தொலைபேசி இலக் கத்தையும் கொடுத்து விட்டு சென்றுள்ளார்.

குறித்த நபர் திருத்திய உதிரிப் பாகத்துடன் மீண்டும் வராததினால் அவரின் தொலை பேசி இலக்கத்துக்கு வீட்டுக்காரர் தொடர்பு கொண்ட போது அவ் இலக்கம் பாவனையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவம் மயிலங்காட்டின் பகுதியில் உள்ள பல வீடுகளில் இடம்பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-78)




# இந்து சமயம் குறித்த பிரசார கூட்டங்கள்

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்து சமயத்தவர்களின் கடமை களை எடுத்துரைக்கும் வகையிலான பிர சாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ள நிலையில் முதலாவது கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணி க்கு சுதுமலைசிவன்கோவிலில்இடம்பெறவுள் ளது.

இதன்படி இக் கூட்டங்கள் சுதுமலை சிவன் கோவில், எச்சாட்டி வைரவர் கோயில், ஈஞ்சடி வைரவர் கோயில், நாமகள் சனசமூக நிலை யம், ஆனந்தன் வைரவர் கோவில், சுதுமலை மத்திய சனசமூக நிலையம், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம் போன்ற இடங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதலாவது கூட்டம் இன்று சுது மலை சிவன் கோவிலில் சங்கத்தலைவர் விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். சின் மயா மிஷனின் வதிவிட பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகளும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜாவும் கலந்து கொள்ளவுள்ள னர்.

மக்களுடன் சமயம் சம்பந்தமான கலந்து ரையாடலும் சமகாலத் தேவைப்பாடுகள் பற் றியும் ஆராய்வு இடம்பெறவுள்ளதனால் மக் களை தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தினர் கேட்டுள்ளனர். (அ-9-23)






ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதையும் யாழ். ஆயரை சந்திப் பதையும் பின்னர் ரில்ஹோ விருந்தினர் விடுதியில் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி.சில்வா தலைமையில் இடம்பெற்ற பொலிஸாருடனான கலந்துரையாடலில் பங்கு கொண்டதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.ஆர்.கரன்,உ.சாளீன்)

# த. தேசிய கூட்டமைப்பு இராஜதந்திர ரீதியில் எதையாவது பெற்றால் என்ன செய்வது?

## தவிக்கிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

**புலிகளின் தலைவர் பிரபாகரனைவிட வடக்கில் வெற்றிபெற்றுள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பயங்கரமானவர். பிரபாகரனால் ஆயுதத்தைக்கொண்டு பெற முடியாததை விக்னேஸ்வரன் இராஜதந்திர ரீதியில் பெற முயற்சிக்கிறார். எனவே, இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதியும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்லவில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

ஆயுத ரீதியில் இழந்த ஒன்றை மீண்டும் ஆயுதத்தைக்கொண்டு பெற்றுவிடலாம். ஆனால், இராஜதந்திர ரீதியில் எதனையாவது கூட்டமைப்பு பெற்றுவிட்டால் அதனை மீட்பது கடினமாகவே இருக்கும். பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகள் இராஜதந்திர ரீதியிலேயே உருவாகின என்றும் அவர் குறிப்பிட்டார்.வடக்குத் தேர்தல் முடிவுகளை பார்த்து இன்று பலர் அச்சமடைந்துள்ளனர். ஆனால், இவ்வாறான தேர்தல் முடிவு வரும் என்பது எமக்கு அன்றே தெரிந்திருந்தது. அதனை நாங்கள் எதிர்வுகூறியிருந் தோம்.

வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. அந்த வகையில் வடக்கின் சில வீதிகளுக்கு பிரபாகரன் மற்றும் தமிழ்ச் செல்வன் என்று பெயர் வைத்தால் யாராலும் மாற்ற முடியாது.

இது ஆபத்தான நிலைமையாகும். புலிகளின் அரசியல் பிரிவே இன்று வடக்குத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளது என்பதனை நாம் மறக்கக்கூடாது. பிரபாகரனால் ஆயுதத்தால் செய்ய முடியாததை இராஜதந்திர ரீதியில் செய்வதற்கு இவர்களினால் முயற்சிக்கப்படும்.

அந்த வகையில் பிரபாகரன் முடித்த பயணத்தை விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்துள்ளார். தமிழ் இனவாதம் புதிய வடிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மீண்டும் நந்திக்கடல் நோக்கி போகவேண்டாம் என்று தமிழ் மக்களை கேட்கின்றோம் எனக் கூறியுள்ளார். (அ-2)

# ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெற இலங்கையின் ஆதரவை கோருகிறது நியூசிலாந்து

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெற நியூசிலாந்து இலங்கையின் ஆதரவை கோரியுள்ளதாக ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் சுழற்சி முறை அங்கத்துவத்தை பெறும் போட்டியில் நியூசிலாந்து பங்கேற்கவுளளது.

நியூயோர்க்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ இலங்கையின் ஆதரவை கோரியதாக ஜனாதிபதியின் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை எந்த நாட்டுக்கு ஆதரவு வழங்குவது என்பதை இன்னும் தீர்மானிக்கவி ல்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீயிடம் தெரிவி த்துள் ளார். எனினும் நியூலாந்தின் கோரிக் கையை இலங்கை பரிசீலிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு ஜோன் கீ கருத்து தெரிவிக்கையில், இலங்கை நியூசிலாந்தின் பால் உற்பத்தி துறையின் மிகவும் முக்கியமான சந்தை எனக் கூறியுள்ளார். அத்துடன் இலங்கை பால் உற்பத்தி துறையின் வளர்ச்சிக்கான தொழில்நுட்ப நிபுணர்களை பகிர்ந்து கொள்ள தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை எதிர்பார்த்துள்ளதாகவும் நியூலாந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளார். 2011 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் தன்னால் கலந்து கொள்ள முடியாது போனதாகவும் இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் இதன் போது கூறியுள்ளார்.

இதன்போது இலங்கையின் போருக்கு பின்னரான வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, வேலையின்றி இருப்பவர்கள் சதவீதம் குறைந்துள்ளமை , பொருளாதார சூழ்நிலைகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நியூசிலாந்து விளக்கியதாக ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது. (அ-2)


உயர்தர பரீட்சைகளின் பின்

அலுவலக பயன்பாட்டுக்கல்வி

**Advanced Diploma in Office Administration**

(Office Application, DTP, Accounting)

Duration 4 Months

(சி/4930)

Mega Special offer

CSC-ASIAN COMPUTER EDUCATION

AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 021 2225677 | சாவகச்சேரி 021 2270267 |
| கிளிநொச்சி 021 2283925 | வவுனியா 024 2226050 |



**மனத்தளர்வா? தனிமையா? வாழ்க்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**

**021 222 8117**

(சி-4924)



உ

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம

புருஷோத்தம் பரமாத்மா

ஸ்ரீ பகவதி சமேத

ஸ்ரீ பகவதே நமஹ

## ஸ்ரீ அம்மா பகவான் ஆரோக்கிய பூஜை



இன்று 28.09.2013 சனிக்கிழமை பி.ப. 3.மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் ஸ்ரீ அம்மா பகவான் ஆரோக்கிய பூஜை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் தீராத நோய்களினாலும் வைத்தியர்களினால் இனங்காண முடியாத நோய்களினாலும் துன்பம் துயரப்படும் மக்கள் புனிதமாகவும் பவித்திரத்தன்மையுடனும் வருகை தந்து ஆன்மீக முறையில் ஸ்ரீ தாட்ஷாகார அம்மா பகவானுடன் உரையாடி அருள் ஆசிகளை அற்புதமாகப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

இப்பூஜை இந்தியாவில் உள்ள இலங்கைக்கான ஸ்ரீ அம்மா பகவானின் சீடர் ஸ்ரீ உமாஜி அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெறும். நோய்கள் அற்புதமாக குணமடைந்தவர்கள் நன்றிக்கடன் செலுத்துவதற்காக சத்தியலோகா வரதப் பாளையம் ஸ்ரீ அம்மா பகவான் நேரடி தரிசனத்திற்கு செல்ல விரும்புபவர்களுக்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.

நன்றி

**சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையம்**

**யாழ்.மாவட்டம், தொ.பே: 0777651719**

(சி/4931)


# சிரமதானம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஏற்பாட்டில் சிரமதான நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பரிஷ் லியோக் கழகத்தின் தலைவர் லியோ. ஜெபநேசன் தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ள சிரமதானத்தில் 30 ற்கும் அதிகமான கழக உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு விரைவில் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் சமூக சேவைகளில் ஈடுபட விரும்புவர்கள் இணைந்து கொள்ள முடியுமென்றும் இக் கழகத்தின் ஆலோசகர் தெரிவித்துள்ளார். (அ-9-23)

# 28 ஆவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் வ.சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதிவாளர் எஸ்.எம்.நசீர், சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் சு.வரதபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் (அ-5)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா :36 செவ் 1<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L , காசாளர் (தனியார், நிரந்தரம்)<br>தொ.இ:B2349 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா :27.75<br>உயரம்: 167 CM<br>தகைமை/தொழில்:Bsc (AGRI) DEMO<br>தொ.இ:G2368 |
| பிறப்பு: 1967 இந்து(V)<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L கோவில் அலுவலக உதவியாளர்<br>தொ.இ:B2351 | பிறப்பு: 1979 இந்து (KO)<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா :124 சூரி, செவ் 8<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G2374 |
| பிறப்பு: 1972 இந்து(V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 37.5 செவ் 7<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L (வியாபாரம்) சொந்தம் (Tourist Van, ticketing, India)<br>தொ.இ:B2352 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>கி.பா :74 செவ் 8<br>தகைமை/தொழில்: BBM, MBA (கணக்காளர்) கனடா (Citizen)<br>தொ.இ:G2377 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா :9.25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L கனடா PR<br>தொ.இ:B2353 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா :54.5 செவ் 8<br>தகைமை/தொழில்: Bsc Bottane Special பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ:G2378 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

# கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெரிவுக்குழு முன்வைத்து பேச வேண்டும்

## அரசுக்கு விக்கிரமபாகு ஆலோசனை

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வு எதனையும் முன்வைக்கவில்லையென்ற அரசு தரப்பின் குற்றச்சாட்டு அக்கட்சி முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான நிலையில் பாராளு மன்ற தெரிவுக்குழு முன் அரசாங்கம் அதனை முன்வைத்து கூட்டமைப்புடன் பேச வேண்டுமென நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.**



அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பு கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மகாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

வடபகுதி தேர்தலில் முழுக்க முழுக்க இராணுவத்தின் தலையீடு காணப்பட்டது. இராணுவத்தின் வேட்பாளர்களாகவே அரசாங்கத் தரப்பினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறான நிலைமையில் எதிரணியினர் தமது பிரசாரத்தை கஷ்டப்பட்டு சவால்களுக்கு முகம்கொடுத்தே முன்னெடுத்தனர். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவை அனைத்தையும் தாண்டி வெற்றி பெற்றுள்ளது. தேர்தல் முடிவுகளின்படி கூட்டமைப்பின் சார்பில் 30 உறுப்பினர்களும் எதிர்த்தரப்பில் 7 பேரும் வடமாகாண சபையில் உள்ளனர்.

அரசாங்கத் தரப்பினர் தமது பிரசாரத்தில் வடபகுதியில் எதிர்க்கட்சிகள் என்ன செய்தார்களென கேள்வியெழுப்பியுள்ளனர். தாம் பாலம் அமைத்தோம், வீதிகள் புனரமைத்தோம் இதுபோல் பல அபிவிருத்திகளை மேற்கொண்டதாக கூறினர். ஆனால் உண்மையில் வடக்கின் அபிவிருத்தி என்பது அங்குள்ள நிலங்கள் அபகரிக்கப்பட்டமை உட்பட ஏனைய வளங்களையும் சூறையாடியமையே அவர்களது சாதனையாகவுள்ளது. வடபகுதி மக்கள் தமக்கு வேண்டியதை இத்தேர்தல் மூலம் வெளிக்காட்டியுள்ளனர்.

இதன் மூலம் அப்பகுதி மக்கள் இனவாதத்தை நிராகரித்துள்ளனர்.

வடக்கில் ஐ.தே.க.கட்சியின் வாக்குகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்தமைக்கு காரணம் இனவாதத்துக்கு எதிராக பேசாது மௌனம் காத்தமையேயாகும். ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகா அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுத்தமை காரணமாக அவரது கட்சிக்கு இம்முறை ஆசனங்கள் கிடைத்துள்ளன. எனவே, ஐக்கிய தேசியக் கட்சி தனது பலவீனத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுத் திட்டம் எதனையும் முன்வைக்கின்றனர் இல்லையென அரசாங்கத் தரப்பினரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. தற்போது கூட்டமைப்பினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் தீர்வை முன்வைத்துள்ளனர். இதனை பாராளுமன்ற தெரிவுக்குழுவில் முன்வைத்து அரசாங்கம் கூட்டமைப்புடன் பேச்சினை ஆரம்பிக்க வேண்டும்.

இது இவ்வாறிருக்க வடமாகாண சபையில் அமோக வெற்றியையீட்டியுள்ள முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு முன்பாக பல கடமைகள் உள்ளன. குறிப்பாக தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் இனவாத சக்திகள் தென்பகுதி மக்கள் மத்தியில் மாறுபட்ட அர்த்தத்தில் தவறான பிரசாரங்களை முன்னெடுக்கின்றன. இதனை தடுத்து முறியடிப்பதற்கு முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் தென்பகுதி மக்களுக்கு தமிழ் மக்களின் நியாயப்பாட்டினை புரியவைக்க வேண்டும். இது அவரது முக்கிய கடமையாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## பொருளாதார தொகை மதிப்பீடு நான்கு கட்டங்களாக அமுலாகும்

(தும்பளை)

2013/2014 ஆம் ஆண்டுக்கான பொருளாதார தொகை மதிப்பீடு 4 கட்டங்களாக அமுல்படுத்தப்படவுள்ளதாக தொகை மதிப்பீட்டு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதில் 2013 ஆம் ஆண்டுக்கு இரண்டு கட்டங்களும் 2014 ஆம் ஆண்டுக்கு இரு கட்டங்களும் பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி 2013 ஆம் ஆண்டுக்கான இரண்டு கட்ட தொகை மதிப்பீடுகளாக கடந்த ஜுலை மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை சகல பெருந்தோட்டங்களையும் (20 ஏக்கருக்கு கூடிய விவசாய நிலங்கள்)நிரல்படுத்துதல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை கைத்தொழில் வர்த்தகம் மற்றும் சேவை போன்றனவற்றின் நடவடிக்கைகளை நிரல்படுத்தல் என பிரிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டுக்கான இரண்டு கட்ட தொகை மதிப்பீடுகளாக ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரை சிறுநில விவசாய நிலங்களை நிரல்படுத்தி தரவு சேகரித்தலுடன் ஏற்கனவே நிரல்படுத்தப்பட்ட பெருந்தோட்டத் தரவுகளையும் சேகரித்தல், ஜுலை மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரை நிரல்படுத்தப்பட்ட கைத்தொழில், வர்த்தக மற்றும் சேவை கூறுகள் போன்றனவற்றை சேகரித்தல் என பிரிக்கப்பட்டுள்ளன. பிரிக்கப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பில் பிரதேச செயலகங்களுக்கும் மாவட்ட செயலகங்களுக்கும் மேற்படி திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-19)

## இலங்கை பாதாள உலக தலைவர் இத்தாலியில் கைது

கொலை, கொள்ளை, கப்பம் பெறுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு தென்பகுதியை ஆட்டி படைத்ததாக கூறப்படும் பாதாள உலக தலைவரான எஸ்.டி.எப் நதுன் என்ற நபர் இத்தாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு தரப்பினரின் கண்ணில் மண்ணை தூவி விட்டு நாட்டில் இருந்து தப்பிச் சென்ற குறித்த நபர் இத்தாலியின் மிலானோ நகரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மிலானோ நகரில் தனது செலவில் வர்த்தக நிலையம் ஒன்றை நிர்மாணித்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் இத்தாலியிலும் பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இத்தாலியிலுள்ள இந்த நபரின் நண்பர்களுடன் இணைந்து அங்குள்ள இலங்கையர்களை அச்சுறுத்தி கப்பம் பெற்று வந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள நபரை இலங்கையிடம் கையளிக்குமாறு இலங்கை பாதுகாப்பு தரப்பினர் இத்தாலிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும் இது வரை இத்தாலி அதிகாரிகள் தெளிவான பதில் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## பொதுநலவாய மாநாடு ஏற்பாடுகளை அதிக நாடுகள் பாராட்டியுள்ளன

### கமலேஷ் சர்மா பெருமிதம்

(கொழும்பு)

உணரக்கூடிய பெறுபேறுகளை நமதாக்கிக்கொள்ள வேண்டும். இன்றேல் இம்முறை பொதுநலவாய நாடுகள் மாநாடு இன்னுமொரு கூட்டமாகவே அமையும் என ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நியூயோர்க்கில் நடைபெற்றுள்ளது.

இதன்போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கமலேஷ் சர்மாவிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

இச்சந்திப்பின் போது இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த கமலேஷ் சர்மா, அரச தலைவர்களுடனான சந்திப்பும் நாம் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ள பெறுபேறுகளும் சாதகமான நிலையை தோற்றுவிக்கும்.

மாநாட்டின் தொனிப்பொருளான பங்கேற்பு, நீதி, நியாயம் போன்ற கோணங்களிலான உள்ளடக்கமானது அனைவரதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அனைத்து மக்களுக்கும் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் அபிவிருத்தியின் பயன்கள் கிட்ட வேண்டும் என்ற ஜனாதிபதியின் சிந்தனை நோக்கின் வெளிப்பாடாகவே இத் தொனிப் பொருள் அமைந்துள்ளது.

மாநாட்டின் ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் வகையில் இலங்கைக்கு வருகை தந்த பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டு முன்னேற்பாடு நடவடிக்கைகளை பாராட்டியுள்ளனர்.

இவ்வாறு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைப் பார்வையிட இலங்கைக்கு வருகைதர முடியாத நாடுகளின் தேவைகளை இயலுமான வகையில் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கையானது சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## புனித யுவானியார் சொரூபம் திருட்டு

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலயத்தில் பக்தர்களின் வணக்கத்திற்காக வைத்திருந்த புனித யுவானியார் சொரூபம் கடந்த செவ்வாய்க்கிழமை காணாமற் போயுள்ளது.

ஆலய திருச்சொரூபம் வைக்கப்பட்டிருந்த கூடு பூட்டப்பட்டிருந்தபோதும் அவற்றை உடைத்து திருச்சொரூபத்தை திருடியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வேலணை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என பங்குத் தந்தை தெரிவித்துள்ளார். (அ-2)


உ

1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17.07.1947

இறப்பு 09.10.2012



கண்டாவளையை பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் நடராசா நாகமுத்து (கமலா)

திதி – பூரண அபரபக்க நவமி

தேடுகின்றோம் தேடுகின்றோம்
தொலைந்து போன
நம் உயிரை தேடுகின்றோம்
ஓராண்டு சென்றதம்மா
எம் உயிர் அம்மாவே
உங்கள் உயிரைத் தேடுகின்றோம்
பாசப் பிணைப்பை யாசித்து ஆற்றிடா
துயர் தந்து நெடுந்தூரம் சென்றாயோ
அம்மா உன் புன் முறுவலையும்
பாசமுகத்தையும் பார்ப்பதற்கு தேடுகின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தேடும் விழிகளுடன்
குடும்பத்தினர்

(சி/4929)

# ஒக்டோபர் மாதம் 7-13 ஆம் திகதி வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

அதிகரித்துவரும்டெங்குநோயின் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

இலங்கையின் பல பகுதிகளிலும் பருவகால மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் பரவல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் நாடு முழுவதும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து தீவிரப்படுத்தும் நோக்குடன் மத்திய சுகாதார அமைச்சினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் வாரத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பின்வருமாறு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

✱ பிரதேச செயலாளர் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிரதேசத்திலுள்ள நிறுவனங்களையும் கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்பு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும்.

✱ கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணிக்குழு கூட்டத்தை கிராம சேவகர்தலைமையில் ஏற்பாடுசெய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். பொது சுகாதார பரிசோதகர் இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும்.

✱ ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படும்.

✱ குறித்த நாளில் குறித்த வலயத்திற்குட்பட்ட சகல நிறுவனங்களும் வைத்தியசாலைகளும் பொது இடங்களும் வணக்கத் தலங்களும் வர்த்தக நிலையங்களும் வீடுகளும் பராமரிப்பற்ற காணிகளும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

✱ குறித்த நாளில் குறித்த வலயத்தில் இடம்பெறும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்குவதற்கு பல குழுக்கள் வீடுகளையும் நிறுவனங்களையும் பொது இடங்களையும் தரிசிப்பர்.

இக் குழுக்களில் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதார தொண்டர்கள், கிராம சேவகர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமூக அமைப்புக்களின் தொண்டர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபட வேண்டும்.

✱ இவ்வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும் அதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்களையும் சுகாதார வைத்திய அதிகாரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அரசாங்க அதிபருக்கும் மத்திய, மாகாண சுகாதார அமைச்சுக்களுக்கும் தினமும் அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே, யாழ். மாவட்டத்தில் அனைவரும் நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது மக்களை ஆட்கொல்லி டெங்கு நோயிலிருந்து பாதுகாப்போம் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டியில் யாழ்ப்பாணத்திற்கு பத்து பதக்கங்கள்

(மானிப்பாய்)

தேசியமட்ட ஜோன் டார்பட் மெய்வல்லுநர் போட்டியில் இரண்டு தங்கம், நான்கு வெள்ளி, நான்கு வெண்கலம் உட்பட மொத்தமாக பத்து பதக்கங்களை யாழ்ப்பாண மாவட்டம் பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜோன் டார்பட் என அழைக்கப்படும் 83 ஆவது தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நடைபெற்ற போட்டிகளில் இரண்டுதங்கம், நான்கு வெள்ளி, நான்கு வெண்கலம் உட்பட மொத்தமாக பத்து பதக்கங்களை யாழ்ப்பாண மாவட்டம் பெற்றுக் கொண்டுள்ளது. பெறப்பட்ட இரண்டு தங்க பதக்கங்களையும் கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக் கல்லூரி வீரர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதன்படி அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி இரண்டு தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கம் உட்பட ஐந்து பதக்கங்களையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக நான்கு பதக்கங்களையும் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணி ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டது.

கடந்த காலங்களில் இருந்து யாழ்.மாவட்டம் சார்பாக அளவெட்டி அருணோதய மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகிய அணிகள் தேசிய மட்ட ரீதியில் குறிப்பாக கோலூன்றிப் பாய்தலில் முன்னணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5-23)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய ஆரம்பப் பிரிவுக்கான வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா, கௌரவ விருந்தினராக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி மைதிலி தேவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை பாடசாலையின் பழைய மாணவரான வேலுப்பிள்ளை சிவசுந்தரம் வழங்கி வைக்கவுள்ளார். (அ-5)

# இதுவரை 346 இந்திய மீனவர்கள் கைது

இவ்வருடத்தின் இதுவரையூன காலப்பகு தியில் 346 இந்திய மீனவர்கள் கடற்படை யினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கடற்படையினரால் கடந்த காலப் பகுதியில் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் 68 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். இதேவேளை கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை அரச உடைமையாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்திருந்தார். (அ-2)

# இத்தாலியின் தேர்தலில் இலங்கையர் மூவர் போட்டி

இத்தாலியின் பலெர்மோ நகர சபைத் தேர்தலில் இலங்கையர்கள் 3 பேர் போட்டியிடவுள்ளனர். இவர்களில் ஒரு வேட்பாளரான தில்கி பர்ணாந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தான் தேர்தலில் வெற்றி பெற்றால் பாரபட்சமின்றி அனைத்து இனத்தவருக்கும் உதவி செய்யப் போவதாக தில்கி தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் பலெர்மோ நகரில் சுமார் 5 ஆயிரம் தமிழர்களும் 500 சிங்களவர்களும் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ-2)




2013 ஆம் ஆண்டுக்கான வடமாகாண மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் யா/ உயரப்புலம் மெ.மி.த.க.வித்தியாலய மாணவி ஜெயச்சந்திரன் ஜனார்த்தனி 19 வயதுப் பிரிவில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றமைக்காக மன்னார் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.யோக்கப் அவர்களால் வெண்கலப்பதக்கம் அணிவிக்கப்பட்டபோது.... (படம்:-என்.குமார்)

# உணவக வடையில் இரும்பு ஆணி

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு சிற்றுண்டிச் சாலையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு வடையில் இரும்பு அணி ஒன்று இருக்கக் காணப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரியின் கனிஷ்ட ஊழியர் ஒருவர் வடையை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில் ஏதோ இருப்பதை உணர்ந்து பார்த்த போது வடையில் ஆணி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் சிற்றுண்டிச்சாலை ஊழியருக்குக் காண்பித்த போது அந்த ஊழியர் அந்த வடையைப் பறித்துக் கொண்டு சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக தமக்கு எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை என தேசிய ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜாசிங்ஹ கூறியுள்ளார். (அ)

# கூட்டமைப்பின் கடிதத்திற்கு பதில் அனுப்பினார் ஆளுநர்

முதலமைச்சராக சி.வி.விக்கினேஸ்வரனை த.தே.கூட்டமைப்பு ஏகமானதாக தீர்மானித்து, வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிய கடிதம் தமக்கு கிடைத்துள்ளது என ஆளுநர் உத்தியோக பூர்வமாக எமக்கு அறிவித்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சி உறுப்பினர்கள், மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய வடமாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து ஏகமானதாக வடக்கு மாகாண சபை முதலமைச்சராக சி.வி.விக்கினேஸ்வரனை தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்த அறிவித்தலை நாம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு உத்தியோக பூர்வமாக கடிதம் மூலம் அனுப்பி வைத்திருந்தோம்.

இந்த அறிவித்தலுக்கு அமைய தமக்கு குறித்த அறிவித்தல் கடிதம் கிடைத்துள்ளதாக வடமாகாண ஆளுநர் உத்தியோகபூர்வமாக எமக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்னும் சில தினங்களில் வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் அமைக்கப்படும். இதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றார். (அ-2)

# பறவை, எலிகளை கடத்திய நபர் கைது

(கொழும்பு)


கட்டுநாயக்க விமான நிலையத்தில் பறவை மற்றும் எலிகளை சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவந்த நபரொருவர் சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்திலிருந்து பயணித்த இலங்கைப் பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க அதிகாரிகளினால் குறித்த நபரின் பைகள் சோதனையிடப்பட்டபோது பறவைகள் மற்றும் எலிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நான்கு புறாக்கள் உட்பட 14 பறவைகளும் 4 எலிகளும் குறித்த சந்தேக நபரின் பையினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)



## தண்டனை

ஒருநாள் சக்கரவர்த்தி அக்பர் அரசவைக்கு வந்தார். அவரது முகம் சிறிது வாட்டமாகத் தென்பட்டது. அக்பர் தனது இருக்கையில் அமர்ந்து, அவர் மிகவும் கோபமாக இருப்பதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு அவையினரைக் கண்டார். அனைவரும் பயத்தில் நடுங்கி இவருக்கு என்ன ஆயிற்று என்று எண்ணினர்.

"பாதுஷாவே! தங்கள் முகம் வாடியிருப்பதன் காரணம் என்னவோ?" அக்பரின் அரசவையில் உள்ள "நவரத்தினங்க"ளுள் ஒருவரான ராஜா தோடர்மால் கேட்டார். "நான் அவைக்கு வந்து கொண்டிருக்கும்போது யாரோ ஒருவன் எனது மீசையைப் பிடித்து இழுத்தான். அவன் என் முகத்தில் துப்பினான். கூறுங்கள், அவனை எப்படி தண்டிப்பது?" அக்பர் கேட்டார்.


"அவனை உடனே கைது செய்ய வேண்டும்!" எனக் கூறினார் ஒருவர். "அவனுக்கு நன்கு சவுக்கடி கொடுத்து அவனது தலையைத் துண்டிக்க வேண்டும்" - மற்றொருவர் கூறினார்.

மன்னரின் - முகத்தில் துப்பி அவரது மீசையைப் பிடித்திழுத்த "அவனை இந்நாட்டிலிருந்தே வெளியேற்ற வேண்டும்" என இன்னொருவர் கூறினார்.

"அவனை எரியும் நெருப்புத் துண்டங்களின் மேல் நடக்க வைக்க வேண்டும்"என வேறொருவர் கூறினார்.

இந்த உற்சாகமான உரையாடலின் போது பீர்பால் மட்டும் மௌனமாக இருந்தார். அவையினர் பேசுகையில் அவர் புன்முறுவல் பூத்தவாறு இருந்ததை அக்பர் கண்டார்.

"சரி, பீர்பால், என்னிடம் முறை கேடாக நடந்து கொண்டவனுக்கு என்ன தண்டனை வழங்கலாம் எனக் கூறு" என்று மன்னர் கேட்டார்.



"பாதுஷாவே! நீங்கள் அவனை அணைத்து தங்களது மீசையைப் பிடித்திழுத்த அக்கைகளில் முத்த மிட்டு, உங்கள் முகத்தில் துப்பிய அவ் வாயில் இனிப்பினை இடவேண்டும்!"

பீர்பால் புன்னகை பூத்த வாறு கூறினார்.



இதைக்கேட்ட அக்பரின் அவையினர், "என்ன அர்த்தமற்ற முறையில் அவர் பேசுகிறார்!" என குரலெழுப்பினர்.

"ஆம் பாதுஷாவே! பீர்பால் எப்பொழுதும் நாங்கள் என்ன கூறுகிறோமோ அதற்கு எதிராகவே கூறுவார். அவர் சொல்வதை தாங்கள் ஏற்றக்கூடாது" என ஒருவர் வாதாடினார். ஆனால், அக்பர் அமைதியாகக் காணப்பட்டார்.

"பீர்பால், உன்னுடைய பதில் புதுமையாக உள்ளது. ஏன் அவ்வாறு கூறினாய் என விளக்குவாயா?" எனக் கேட்டார். பீர்பால் சிரித்தவாறு பதிலளித்தார். "பாதுஷாவே! உங்களது மீசையைப் பிடித்திழுக்கவும் உங்கள் முகத்தில் உமிழவும், குழந்தை இளவரசரைத் தவிர யாருக்கு தைரிய முள்ளது? அதனால், அவரை நான் கூறியதைத் தவிர வேறு எவ்வாறு தண்டிக்க முடியும்?" என பீர்பால்! விளக்கமளத்தார். "எப்பொழுதும் போல நீ கூறியது சரியே பீர்பால்!" என அக்பர் வியந்து கூறினார்.

மன்னர் அவையினரைப் பார்த்து, பீர்பால் கூறியதுதான் உண்மையாக நிகழ்ந்தது என்றும், அச்செயலைச் செய்து குழந்தை இளவரசரென்றும் கூறினார்.



அவையில் இருந்த அனைவரும் தாங்கள் கூர்ந்து யோசிக்காமல் நடந்து கொண்டதை நினைத்து வெட்கப் பட்டனர்.




- ❖1448 - முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க் மன்னனாக முடிசூடினான்.
- ❖1687 - கிரேக்கத்தின் பழங்கால கட்டடம் பார்த்தினன் குண்டுவெடிப்பில் சேதமடைந்தது.
- ❖1708 - ரஷ்யாவின் முதலாம் பீட்டர் மன்னன் சுவீடன் படைகளை லெஸ்னயா என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் தோற்கடித்தான்.
- ❖1791 - பிரான்ஸ் ஐரோப்பாவில் யூதர்களை அடிமைத் தளையில் இருந்து விடுவித்த முதலாவது நாடானது.
- ❖1795 - யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றினர்.
- ❖1867 - டொரோண்டோ ஒண்டாரியோவின் தலை நகரமாகியது.
- ❖1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைக் கைப் பற்றியது.
- ❖1889 - நிறை மற்றும் அளைவைகளுக்கான பொது மாநாட்டில் மீட்டரின் நீளமானது, பனிக்கட்டியின் உருகுநிலையில் 10 விழுக்காடு இரிடியம் கலந்த பிளாட்டினம் கலவையின் கோள் ஒன்றின் இரண்டு கோடுகளிற்கிடையேயான நீளத்துக்கு சமனாக அறிவிக்கப்பட்டது.
- ❖1928 - அலெக்சாண்டர் பிளெமிங் பெனிசிலினைக் கண்டுபிடித்தார்.
- ❖1939- நாசி ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போலந்து நாட்டை தமக்குள் பங்கு போட உடன்பட்டன.
- ❖1939 - இரண்டாம் உலகப் போர்; போலந்தின் தலைநகர் வார்சா ஜேர்மனியிடம் வீழ்ந் தது.
- ❖1950 - இந்தோனேசியா ஐ.நா.வில் இணைந்தது.
- ❖1958 - பிரெஞ்சின் ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- ❖1960 - மாலி, செனெகல் ஆகிய நாடுகள் ஐ.நா.வில் இணைந்தன.
- ❖1961 - டமாஸ்கசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் எகிப்து, சிரியா ஒன்றியமான ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுக்கு வந்தது.

### பிறப்புகள்

- ❖1852- ஹென்றி முவாசான், பிரெஞ்சு வேதியியல் அறிஞர் (இ.1907)
- ❖1929 - லதா மங்கேஷ்கர், இந்தியப் பின்னணிப் பாடகி.
- ❖1947 - ஷேக் ஹசீனா, வங்காளதேசத்தின் முன்னாள் பிரதமர்.
- ❖1982 - அபினவ் பிந்திரா, இந்திய ஒலிம்பிக் வீரர்.


### இறப்புகள்

- ❖1895 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர் (பி.1822)
- ❖1953 - எட்வின் ஹபிள், அமெரிக்க வானியலாளர் (பி.1899)
- ❖1956- வில்லியம் போயிங், அமெரிக்க வான்வெளி முன்னோடி(பி.1881)
- ❖1978 - பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பர் (பி.1912)

### சிறப்புகள்

உலக விலங்கு விசர் நோய் தினம்.
பசுமை நுகர்வோர் தினம்

### எட்வின் ஹபிள்



எட்வின் பாவெல் ஹபிள் எனும் முழுப்பெயர் கொண்ட எட்வின் ஹபிள் ஒரு புகழ் பெற்ற வானியலாளர் ஆவார்.

இவர் இளமைக்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் இவர் கல்வித் திறமையிலும் பார்க்க விளையாட்டுத் திறமைக்காகவே பெயர் பெற்றிருந்தார்.

இவர் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில், கணிதம், வானியல் என்பவற்றைக் கற்று 1910 இல் இளநிலைப் பட்டம் பெற்றார்.

ஒக்ஸ்ஃபோட்டில் முதுநிலைப்பட்டம் பெற்றபின்னர் அமெரிக்காவுக்குத் திரும்பினார்.ஆரம்பத்தில் இவர் நியூ அல்பனியிலுள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியராகவும் கூடைப்பந்துப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார். அத்துடன் கெண்டகியில் சட்டத்தொழிலும் செய்து வந்தார். முதலாம் உலகப் போரில் இராணுவ சேவையில் சேர்ந்த இவர், விரைவில் மேஜர் தரத்துக்கு உயரந்தார். இப்பணியின் பின்னர் வானியல் துறைக்குத் திரும்பிய இவர், சிக்காகோ பல்கலைக்கழகத்தின் யேர்க்ஸ் வானாய்வு நிலையத்தில் சேர்ந்தார். அங்கே 1917 ஆம் ஆண்டில் இவர் முனைவர் பட்டமும் பெற்றுக் கொண்டார்.

# குண்டலி சக்தி என்றால் என்ன?



ஆன்மீகம் 127

…அநேக விதமான கல்லூரி, பள்ளிக்கூடங்களைக் கட்டி, பார சுமைகளைத் தாங்கி, படிக்க முடியாத படிப்புகளை படித்து, பட்டம் பெற்றது காற்றில் பறக்க, படிப்புக் கேற்ப வேலை தேடி படும் துன்பம், ஒன்றுக்கு நூறு! அந்தந்த கல்வி நிறுவனம் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரை, துன்பம் தாக்கும். அது கடும் புயல் போல் வீசும்.

ஏன் சொல்கிறேன் என்றால், கிருஸ்ணர், ராமர் போன்ற அனைத்து தெய்வ அவதாரங்களும் பேரரசர்களும், குருமுனிவர்களிடம் குருகுல பயிற்சி பெற்றவர்களே.

ஒருநல்ல ஆசையற்ற அற்புதமான சித்து புருஷர்களிடம் 12 வருடம் ஏன் என்று கேட்காமல் குரு சொல்லும் பணியை பண்பாக செய்து முடிக்கும் நல்ல ஒழுக்கமான சீடனுக்கு கணப்பொழுதில் குண்டலி சக்தி எழுப்பும் ஆற்றல் ஏற்படும்.

அவன் பரோபகார சிந்தனையுற்றும், தான் என்ற ஆணவ போக்கும், அதிகார வரட்டுப்புத்தியும் இல்லாமல் இருக்க வேண்டும். பணக்காரன் என்பவன் எவ்வகையிலும் குண்டலி சக்தியைப் பெற முடியாது.

இவர்களில் சிலர் சாகும் வரை கோயில், குளம், அருள்வாக்கு, ஜோதிடம் என அழைத்து, மந்திரவாதிகளிடம் தகடு வாங்கி, ஏமாந்தே ஏக்கத்தோடு காலத்தை முடித்துக் கொள்வார்கள்.

மெய்யன்பர்களே! என் குரு மகா முனிவர் பகவான் ஸ்ரீகாகபுஜண்டர் மகரிஷியை திருபாதம் வணங்கி அவரது உத்தரவுப் படி கூறுகிறேன்.

அவரோடு இன்றுவரை 25 வருடம் எவ்வித இன்னல்கள், சோதனை,



உலக சம்மந்தமாக, உடல் சம்மந்தமாக வந்தாலும், அனைத்தையும் மனதளவில் உதறித் தள்ளிவிட்டு அன்பே சிவமான குருவின் உத்தரவுபடி ஓரளவாவது இன்றுவரை முழுமனதுடன் செயற்படுகின்றேன்.

இக்காலத்தில் ஒருவர் இல்லறத்து ஞானியாக இருக்க வேண்டும் என்றால் பத்தாயிரம் முறை பேரரசர்களாக இருந்தவர்களே இப்பதவிக்கு வர முடியும்.

இவர்கள் நினைத்த நேரத்தில் பாதாளம் முதல் மேலோகங்கள் அனைத்தும் போய் வர ஆற்றல் படைத்தவர்கள். இவர்களின் நட்பே உயர்வு தரும். மற்றவர்கள் நட்பெல்லாம் பொய், பொய்யேதான்.

அறிந்து வாழாதவன் வாழ்க்கை வீழ்வது எத்தருணமோ! கருணையும், ஈகையும், அமைதியும், சாந்தமும் இல்லாத பாவிகள் குருவின் பெருமை அறியவே முடியாது. அறியாத பாவிக்கு ஞானம் ஏது? அறிந்தவர் கோடிக்கு ஒருவர் உண்டு.

சினிமாக்காரர்களையும் அரசியல்வாதிகளையும் முதலாளிகளையும் இதய தெய்வம் என்று சொல்லும் மனிதன் எக்காலத்திலும் தெய்வத்தை அடையவே முடியாது.

சினிமாவில் நான் இருந்த போது இளையராஜா அவர்களின் நண்பர் சௌந்தர், பிராணயாமம் செய்வது எப்படி என்ற புத்தகத்தை ஒருமுறை படித்துக்கொண்டிருந்தார். ஏதோ குண்டலி சக்தியை எழுப்ப இந்த பயிற்சி மிக மிக முக்கியம் என்றார்.

சினிமாத் துறையில் அடியேன் பணி செய்து கொண்டிருந்த போது தாம்பரம் செல்வதற்கு தி.நாகரில் இருந்து ரயிலில் புறப்பட்டு போகும் வரை ஏதாவது புத்தகம் படிப்பேன். அப்போது தி.நகர் ரயில்வே ஸ்டேஷனில் குண்டலி யோகம் என்ற புத்தகத்தை ஒருமகான் எழுதி இருப்பதை படித்து நம் உடலில் உள்ள சக்கரங்களையும் அதன் படங்களையும் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். அதைப் படித்த போது இனிமேல் இந்த ஜென்மத்தில் குண்டலி சக்தி எழுப்ப முடியாது. எந்த குருவைத் தேடி பன்னிரெண்டு வருடம் பணி செய்து வாழ்நாளை ஓட்டுவது என்று சிந்தனைகள் பலவாறு ஓடியது.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

(தொடரும்)

# பான் கி மூன் துரோகம்-
# பன்னாட்டு நீதிவிசாரணை தேவை

## ஈழத்தமிழர் படுகொலை குறித்து வைகோவின் கோரிக்கை



“ ஐக்கிய நாடுகள் மன்றம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து, உலக நாடுகளில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், மூண்ட யுத்தங்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் கடமை ஆற்றி இருக்கிறது. ஆனால், பல வேளைகளில் வல்லரசு நாடுகள் ஐ.நா. வின் ஆணைகளை உதாசீனப்படுத்திவிட்டு பிற நாடுகள் மீது இராணுவத் தாக்குதல்களை நடத்தியும் உள்ளன.

இலங்கைத் தீவில், சிங்களப்பேரினவாத அரசு, உலகம் தடைசெய்த குண்டுகளையும் இந்தியா உள்ளிட்ட அணு ஆயுத வல்லரசுகள் தந்த ஆயுதங்களையும் பயன்படுத்தி இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை, ஈவிரக்கம் இன்றி மிகக் கொடூரமாகக் கொன்று குவித்தபோது அக்கோரக் கொலைகளைத் தடுக்கும் கடமையில் ஐ.நா. மன்றம் திட்டமிட்டே தவறியது என்பதை ஐ.நா.வின் பொதுச் செயலாளர் பான்கி மூன், ஐ.நா. வின் இலங்கை நடவடிக்கை குறித்த உள்ளக ஆய்வின்படி ஒப்புதல் வாக்குமூலமாகத் தந்துள்ளார்.

யுத்தத்தை நிறுத்தவோ, மனித உரிமைகளைக் காக்கவோ தக்க நடவடிக்கைகளை ஐ.நா. எடுக்கவில்லை; அதில் தோற்றுப் போனது; அதற்கு ஐ.நா. மன்றத்தின் உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பு இல்லாததே காரணம் என்று கூறி இருக்கிறார்.

இலங்கையில் யுத்த காலத்தில் ஐ.நா. எடுத்த நடவடிக்கைகள் குறித்து உள்ளக ஆய்வுக்குழு ஒன்றை சார்லி பெட்ரி தலைமையில், 2012 ஆம் ஆண்டு ஐ.நா.வின் பொதுச்செயலாளர் அமைத்தார். அந்தக் குழு எட்டு மாத காலம் ஆய்வு செய்து, ஒரு அறிக்கை தந்தது. பல உண்மைகள் அந்த அறிக்கையில் முழுமையாக வெளிவராவிடினும், இனக்கொலையை ஐ.நா. அதிகாரிகள் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; சிங்கள அரசின் அராஜகமான ஆணைகளுக்குக் கட்டுப்பட்டுக் கிடந்தனர். அவர்கள கண் எதிரேயே ஈழத்தமிழர்கள் குண்டுவீச்சுக்குப் பலியானதையும் உணவு இன்றிப் பட்டினியால் மடிந்ததையும் மருத்துவச் சிகிச்சை இன்றியே பலர் சாக நேர்ந்ததையும் கண்டபின்னரும் மனச்சாட்சியைப் புதைத்துவிட்டுக் கடமை தவறினர் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

சிங்கள அரசின் உத்தரவுக்கு அடிபணிந்து இராணுவத் தாக்குதலுக்கு உள்ளாகி தமிழர்கள் மரண ஓலம் எழுப்பிக்கொண்டு இருந்த இடங்களில் இருந்து ஐ.நா. வெளியேறிய கொடுமையும் நடந்தது.

ஈழத்தமிழர்க்ள், குறிப்பாக வயோதிபர்களும், பெண்களும் ஐ.நா. அதிகாரிகளின் கால்களில் விழுந்து எங்களை விட்டுவிட்டுப் போய்விடாதீர்கள் என்று மன்றாடியபோதும் இரக்கம் காட்டாமல் அந்த இடங்களை விட்டு ஐ.நா. அதிகாரிகள் கொழும்புக்குச் சென்று விட்டனர். ஐ.நா. மன்றத்தின் அடிப்படைக் கோட்பாடே குழிதோண்டிப் புதைக்கபட்டது.

பான்கி மூன் அமைத்த மார்சுகி தாருமன் தலைமையிலான மூவர் குழு தனது அறிக்கையில் ஈழத்தமிழர்கள் கோரமாகக் கொல்லப்பட்டதை, இசைப்பிரியா உள்ளிட்ட தமிழ்ப் பெண்கள் கொடூரமாகப் பாலியல் வன் முறைக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டது உள்ளிட்ட எண்ணற்ற நிகழ்வுகளை தகுந்த ஆதாரங்களோடு வெளிச்சத்துக்குக்கொண்டு வந்தது மட்டும் அல்லாமல், இது குறித்து சுதந்திரமான பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்து இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட விசாரணைக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் எந்த ஏற்பாடும் செய்யவில்லை.

அண்மையில் இலங்கை சென்று திரும்பிய மனித உரிமைகள் கவுன்சில் தலைவர் நவநீதம்பிள்ளை, கவுன்சிலில் வாய்மொழியாகத் தந்துள்ள அறிக்கையில் பல்லாயிரக் கணக்கான ஈழத்தமிழர்கள், காணாமல் போனவர்கள் பற்றிய எந்தத் தகவலும் தெரியவில்லை என்றும் தமிழர் பகுதிகளில் இராணுவமும் பொலிசும் குவிக்கப்பட்டு இருப்பதையும் நீதித்துறை முடக்கப்பட்டு, ஜனநாயக உரிமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதையும் சுட்டிக்காட்டி உள்ளார்.

ஈழத்தமிழர் படுகொலையை, மூடி மறைப்பதற்காகவே அது குறித்து எந்த விசாரணையையும் உலக நாடுகள் மேற்கொள்ளக்கூடாது என்பதற்காகவே நிரந்தரமாக ஈழத்தமிழர்களை சிங்களவரின் அடிமை நுகத்தடியில் அழுத்துவதற்காகவே சிங்கள அரசும் இந்திய அரசும் திட்டமிட்டு காமன்வெல்த் மாநாட்டை நவம்பர் 17,18 ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்த ஏற்பாடு செய்து வருகின்றன.

உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காகத்தான் வடக்கு மாகாண சபைத் தேர்தலை சிங்கள அரசு நடத்தியது. போர்க் குற்றம் புரிந்த மஹிந்த ராஜபக்ச கட்சி வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே துன்பத்தில் உழலும் ஈழத்தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெருவாரியாக வாக்குகளைத் தந்து வெற்றிகளைத் தந்தனர். என்றாவது ஒருநாள் தங்களுக்கு நீதியும் விடுதலையும் கிடைக்கும் என்ற ஏக்கத்தோடு உள்ள தமிழ் மக்கள், சிங்கள அரசுக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டவே இந்தத் தீர்ப்பைத் தந்துள்ளனர்.


இந்தச் சூழ்நிலையில் ஐ.நா.வின் பொதுச் செயலாளர் பான் கி மூன் தந்து உள்ள ஒப்புதல் வாக்குமூலம், ஐ.நா.சபையில் திட்டமிட்ட தோல்வி என்பது மட்டும் அல்ல திட்டமிட்ட துரோகம் என்பதுதான் உண்மை. கடமை தவறிய ஐ.நா. அதிகாரிகளும் இந்த இனக் கொலைக் குற்றத்திற்குப் பொறுப்பாளிகள் ஆவார்கள். ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூனும் இதற்குப் பொறுப்பாளி ஆவார்.

சிரியாவில் அதிபர் பசார் அல் ஆஸாத்தின் இராணுவம் டமாஸ்கசுக்கு அருகில் இரசாயனக் குண்டுகளைப் பயன்படுத்தியது என்று ஐ.நா. மன்றத்தில் பலத்த விவாதம்; அமெரிக்கா, பிரிட்டன், ஃப்ரான்ஸ், நாடுகள் சிரியா மீது போர் தொடுப்போம் என்று மிரட்டல்; இரசாயனக் குண்டுகளை ஒப்படைத்து விடுவேன் என்று சிரியா அதிபர் பசார் அறிவிப்பு என்பதையெல்லாம் எண்ணுகையில் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் படுகொலைக்கு உலக நாடுகளின் மனசாட்சி என்ன செய்யப்போகிறது? என்ற கேள்வி எழுகிறது.

மனித உரிமைகள் கோட்பாடு ஐ.நா. மன்றத்தில் இனியும் இருக்குமானால் ஈழத் தமிழர் படுகொலை நடத்திய சிங்கள அரசு மீது சுதந்திரமான பன்னாட்டு நீதி விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. மன்றம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித உரிமைகளில் அக்கறை உள்ள உலக நாடுகள், இந்தக் கடமையைச் செய்ய முன்வர வேண்டும்.

புதைக்கப்பட்ட உண்மைகள், ஒருநாள் வெளிவந்தே தீரும்; ஈழத்தமிழர்களுக்கு நீதியும் சுதந்திரத் தமிழ் ஈழ விடியலும் மலர்வது காலத்தின் கட்டாயம் ஆகும் என்ற நம்பிக்கையோடு உலகெங்கும் உள்ள தமிழர்களும் மனிதஉரிமை ஆர்வலர்களும் ஈழத்தமிழர் படுகொலை குறித்த நீதி விசாரணைக்கு ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டும்; எந்தெந்த வழிகளில், இயலுமோ, அனைத்தையும் செய்வதற்கு தியாக தீபம் திலீபனின் 26 ஆவது நினைவு நாளாகிய இந்த நாளில் சூளுரை மேற்கொள்வோம்” என அந்த நாளில் அவர் தெரிவித்தார்.

# எதிர்கால பூமியும் இணையவழி நிறுவனங்களும் விவசாய விஞ்ஞான கற்கையும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 33-I

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


எதிர்கால பூமி பற்றிய கருப்பொருளினுள்ளே. காலநிலை மாற்றம், பூமி வெப்பமடைதல் இன்னும் பூமியிலிருந்து வெளிவிடப்படும் காபனீரொட்சைட்டு வாயுக்கள் அதிகரித்தல் இவற்றில் வளர்ந்த நாடுகளின் அதீத பங்களிப்பு என பலவற்றை உள்வாங்கியிருக்கின்ற போதும் வளர்ந்து வரும் நாடுகளில் அதற்கான முன்னெடுப்புக்கள், சிறிய நாடாகினும் எதிர்கால பூமியைப் பாதுகாப்பதில் எமது பங்களிப்பு என்பனவற்றை கருத்திற் கொண்டு நாம் என்ன செய்யப்போகின்றோம் என்பதை வடிவமைப்பதாகவே நடைபெற்ற செயலமர்வு சுட்டிக்காட்ட முற்பட்டது.

2012 இல் 7 பில்லியனாகவிருந்த உலக சனத்தொகை 2050 ஆம் ஆண்டில் 9.6 பில்லியன்களாகும். 2030 இல் சீனாவின் சனத்தொகை 1.4 பில்லியன்களும், இந்தியாவினுடையது 1.7 பில்லியன்களும் இலங்கையினது 23 மில்லியன்களாகவும் உயர்ந்துவிடும். இவ்வாறு உயர்ந்துவரும் சனத்தொகைக்கு உணவளிக்க வேண்டியது மிகவும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஏறக்குறைய 70 -80 சதவீத உற்பத்தியில் உயர்வு கண்டாக வேண்டும். இவ்வுணவினை எப்படி உற்பத்தி செய்யப்போகின்றோம் என்பது எம்முன்னேயுள்ள சவால்களிலொன்றாகும். 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உலக உணவு பாதுகாப்பு சுட்டியின்படி கணக்கெடுக்கப்பட்ட 105 நாடுகளில் இலங்கை 62ஆம்இடத்திலும்இந்தியா 66 ஆம்இடத்திலும் பாகிஸ்தான் 75ஆம் இடத்திலும் நேபாளம் 79ஆம் இடத்திலும் பங்களாதேஷ் 81ஆம் இடத்திலும் இருக்கின்றன. இந்த வகையில் பார்த்தால் நமது நாடு ஆசியாக்கண்டத்திலுள்ள ஏனைய நாடுகளை விட முன்னிலையிலிருப்பது புலப்படும்.

பூமிப்பந்தில் ஒப்பீட்டளவில் எமது நாட்டினது பரப்பளவு மிகச்சிறியது. அதனால் எமது நாட்டிலிருந்து வெளிவிடப்படும் இவ்வாறான வேண்டத்தகாத வாயுக்களின் அளவும் மிகச் சிறியதே. இருப்பினும் பூமிப்பந்தினது எதிர்காலத்தைப்பற்றி எமது நாட்டில் நாமும் சிந்திக்க தலைப்பட்டிருப்பதை வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக வளர்ந்த நாடுகளிலிருந்து வந்து பங்குபற்றியிருந்த ஆய்வாளர்கள் பாராட்டியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. எமக்குரிய கடமையை நாம் முன்வந்து செய்ய முயற்சி செய்ததற்கான அங்கீகாரமே இதுவாகும். இவற்றை ஒழுங்குமுறைப்படுத்தி நடைமுறைப்படுத்தவே இணையவழி நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இணையவழி நிறுவனங்கள் நிபுணத்துவம் வாய்ந்த யாராலும் எங்கிருந்தும் இயக்கப்படலாம். இதில் நாமெல்லோரும் உறுப்பினர்களாக இணைந்து காத்திரமானதும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தப்பட்டுள்ள அதேவேளையில் இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் கீழியங்கும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றுக்கான இணைக்கும் அலுவலகத்தின் நேரடி கண்காணிப்பில் இதற்காக தெரிவுசெய்யப்பட்டவர்களைக் கொண்டு செயற்படுத்தப்படும். பதினைந்து இணையவழி நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவையாவன: காலநிலைமாற்றம் மற்றும் எதிர்கால பூமி, இடர் முகாமைத்துவமும் தேசிய பாதுகாப்பும், உள்ளார்ந்த இணைப்புகள், பசுமை வளர்ச்சி, சமநிலையான மாகாண அபிவிருத்தி, உணவு பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு, சக்தி பாதுகாப்பு, அனைவருக்குமான சுகாதாரம், அனைவருக்குமான வாழிடம், கடல்வளத்தை பாதுகாத்தல், நுண்மூலக வளத்தை பாதுகாத்தல், உயிரியல் வளங்கள், அதிநுட்ப மதிப்பேற்றஞ் செய்தல் , இறக்குமதி செய்தல், சிறிய மற்றும் நடுத்தர அத்துடன் கிராம மட்டத்தினாலான வர்த்தக நிறுவனங்களுக்கான தொழில்நுட்பம் ஆகும்.



*வடமாகாண கல்வி அமைச்சினால் க.பொ.த. உயர் தர விவசாய விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வில் கலந்து கொண்டவர்கள்*

மேலும் ஆறு தேசிய சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தேசிய சபைகள் நனோ தொழில்நுட்பம், உயிர்தொழில்நுட்பம், அதியுயர்வான மூலப்பொருட்கள் (Advanced materials), றொபோட்தொழில்நுட்பம், எலக்ரோனிக்ஸ், உயர்வான வடிவமைத்தலும் உற்பத்திசெய்தலும், தகவல் தொழில்நுட்பம், தொலைபேசி தொழில்நுட்பம் மற்றும் வான்வெளி தொழில்நுட்பம் என்பனவற்றுக்காக இயங்கும். தேசிய ரீதியில் ஆராய்ச்சியாள்களை இணைத்து இத்தொழில் நுட்பத்தை வளர்த்தெடுக்க பல்வேறு மட்டங்களிலும் ஆராயப்பட்டு அதற்கான செயலமர்வுகள் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. இவையனைத்துமிணைந்த இச்செயற்பாடு வெற்றி பெற நாமும் இணைந்து கொள்வோம்.

**விவசாய விஞ்ஞான பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களை வலுவூட்டும் செயலமர்வு**

எதிர்கால சந்ததியை வளமானதாக நோக்கிய அபிவிருத்தியில் உணவு பாதுகாப்பு என்பது ஒரு கருப்பொருளாகும். இதனை செயற்படுத்துவதற்கு பலமட்டங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதில் விவசாய விஞ்ஞான பாடத்தினை கற்கும் மாணவர்களது எண்ணிக்கையை அதிகரிப்பதும் மாணவர்களை விவசாய விஞ்ஞானம் சார்ந்த தொழில்நுட்பத்தினுள் உள்வாங்கி அதன் மூலம் அபிவிருத்தியை முன்னெடுப்பதும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பினை அதிகரிப்பதும் முக்கியமானதாகும்.

குறிப்பாக அறிமுகமாகும் உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் பாடத் திட்டம் முழுக்க முழுக்க விவசாய விஞ்ஞான தொழில்நுட்பத்தினை உள்வாங்கி அதனை அபிவிருத்தி செய்வதாகவே அமைந்துள்ளது. இதன்மூலம் கலைப்பிரிவிற்கு தெரிவாகும் மாணவர்களை மட்டுப்படுத்துவதும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கமும் விவசாய பீடமும் இணைந்து வடமாகாணத்தில் உயர்தரத்தில் விவசாய விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வதிவிட செயலமர்வு தொடர்ந்து மூன்று நாட்களாக 26. 27 மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மேலதிக அறிவினை பெற்றுக் கொள்வதற்காக வடமாகாணத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் க.பொ.த உயர்தரத்தில் விவசாய விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு தேவையான விவசாய விஞ்ஞானம் பற்றிய மேலதிக அறிவு மற்றும் செயன்முறை விளக்கங்களை விவசாய மற்றும் விஞ்ஞான பீட விரிவுரையாளர்கள் இணைந்து வழங்குகின்றனர். இனிவருங்காலத்தில் விவசாய விஞ்ஞான கற்கைநெறியை கற்கும் மாணவர்களை அதிகரிக்க மேலும் விரிவாக்க திட்டமிடப்படுவது அவசியமாகும்.

கிளிநொச்சியில் விவசாய பீடம் விரைந்து காலடியெடுத்து வைக்கும் இவ்வேளையில் உயர்கல்வி மற்றும் கல்வி அமைச்சுக்களின் அனுசரணையுடன் விவசாய விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சிகளும் செயலமர்வுகளும் விவசாய பீடத்தினால் வழங்கப்பட்டு விவசாய விஞ்ஞானம் கற்பிக்கப்படும் பாடசாலைகளில் முழுமையான செயன்முறை பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

பல பாடசாலைகளில் நிறுவப்பட்டிருக்கும் ஆய்வு கூடங்களை செயன்முறை பயிற்சிக்கான இடமாக மாற்றியாக வேண்டும். விவசாயத்தில் உட்புகுத்தப்பட்டிருக்கும் நவீன தொழில்நுட்பங்களை அவ்வப்போது விவசாய விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதற்கான தொடர்பாடல் கட்டமைப்பும் உருவாக்கப்படவேண்டும். இவையனைத்தையும் விவசாயபீடத்தினது இணைந்த செயற்பாடாக திட்டமிடப்பட்டு விவசாய விஞ்ஞான கற்கை நெறியை முன்னகர்த்த விவசாயபீடம் என்றுமே தயாராக இருக்கின்றது என்ற செய்தியை இவ்விடத்தில் பதிவு செய்து எமது முழுமையான செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்த இதுசார்ந்த அனைத்து எம்மினிய உறவுகளையும் தங்களது கருத்துக்களை பதிவு செய்ய அழைக்கின்றேன். எமது தேசத்தை நாமே அபிவிருத்தி செய்தல் வேண்டும். மனமுண்டானால் இடமுண்டு.

# வடமாகாணசபை தேர்தலை நடத்தியது அரசியல் தவறு

## அமைச்சர் சம்பிக்க கொதிப்பு

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அரசாங்கம் அரசியல் ரீதியான தவறை செய்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டமை காரணமாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் செய்த இன சுத்திகரிப்புக்கு சட்டரீதியான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை குடியேற்றாமல் இன சமநிலையற்ற நிலையில் தேர்தல் நடத்தப்பட்டது தவறானது. அத்துடன் இது தமிழ் சுயாட்சிக்கு கைகொடுப்பது போன்ற செயல். இதன் முடிவுகள் படுபயங்கரமானதாக இருக்கும்.

பிரபாகரனின் புதிய நாசிசவாதம் இந்த தேர்தலுடன் முன்னோக்கி வந்துள்ளது. இதனால் விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் ஒருங்கிணையும். நாடுகடந்த தமிழ் அரசுக்கான ஒருங்கிணைவும் நடக்கும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து ஈழ நாட்டை உருவாக்க சர்வதேச ரீதியில் ஆதரவை பெறுவதற்கான விடயங்களை வட பகுதி மக்கள் புரிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். எனினும் அதற்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.தமிழ் சமூகம் ஜனநாயக சமூகம் அல்ல. பிரபாகரனின் துப்பாக்கிக்கு பயந்து வாக்களித்தனர். வெளிநாடுகளில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புகள், குறுஞ் செய்திகளுக்கு அமைய மக்கள் வாக்களித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் மக்கள் பேசுவதற்கான சுதந்திரமில்லை. வெளிநாட்டு தூதரங்கள் இலங்கையின் வடக்கை ஆளுகை செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட இம்முறை தேர்தலில் மூன்று மடங்கு வாக்குகளை பெற்றுள்ளது.இந்திய மத்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்கம் போன்ற வெளிநாட்டு சக்திகள் வடக்கு மற்றும் தென்பகுதி மக்கள் ஐக்கியமாக இருந்த சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்தன என்றார். (அ-2)

# நீர்வெறுப்பு நோயிலிருந்து எம்மை பாதுகாப்போம்

**விசர் நாய்க் கடி**

மனிதர்களுக்கு மட்டுமன்றி வளர்ப்புப் பிராணிகளுக்கும் அதிகளவில் அச்சுறுத்தலைக் கொடுக்கின்ற ஒரு நோயாக நீர்வெறுப்பு நோய் காணப்படுகின்றது. இது நாய்களின் மூலம் அதிகளவில் வெளிக்காட்டப்படுவதுடன், அவற்றினால் மனிதர்களும் தாக்கப்படுவதனால் இது விசர் நாய்கடி என மக்களால் அழைக்கப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் நீர்வெறுப்பு நோயினால் மனிதர்களில் ஏற்படும் இறப்பில் 86 % மாணவை நாய்கள் மூலம் மனிதர்களுக்கு கடத்தப்பட்டதால் ஏற்பட்டவையாகும். இதில் கட்டாக் காலி /தெருநாய்கள் மூலமாக 56%மான இறப்புகளும் வீட்டு வளர்ப்பு நாய்கள் மூலமாக 26%மான இறப்புகளும் அயல் வீட்டு வளர்ப்பு நாய்கள் மூலமாக 26%மான இறப்புகளும் பதிவாகியுள்ளன. மிகுதி 14%மானவை மனித இறப்புகள் மற்றைய விலங்குகள் மூலமாக ஏற்படுத்தப்பட்டவை. மனிதர்களுக்கு நீர்வெறுப்பு நோயினை கடத்திச் செல்கின்ற மிகப் பிரதானமான காவிகளாக நாய்கள் செயற்படுகின்றன.

கட்டுப்பாடற்ற தெருநாய்களின் ஆதிக்கம் மற்றும் அளவுக்கதிகமான தடையற்ற இனப் பெருக்கம் காரணமாக அதிகளவிலான நாய்களை நமது சூழலில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவற்றின் பெருக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் மனிதர்களின் நடத்தையும் காரணமாக அமைக்கின்றது. வீட்டில் இருந்து பெறப்படுகின்ற பழுதான, எஞ்சிய உணவுப்பொருட்கள், உணவு விற்பனை நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் மற்றும் மீன், இறைச்சி விற்பனை நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் எஞ்சிய கழிவுப் பொருட்கள் என்பன நெருவில் வீசப்படுகின்றன. இவற்றை தெருநாய்கள் தமது உணவாகப் பெற்று வளர்ச்சியடைகின்றன. இந்த தெரு நாய்களின் அதிகரிப்பானது நீர்வெறுப்பு நோய் பரவலுக்கும் அதனால் ஏற்படும் ஆபத்திற்கும் அதிகளவில் வலுச்சேர்க்கின்றது.

**நீர்வெறுப்பு நோய்க் காரணியும் கடத்தப்படும் முறையும்**

நீர்வெறுப்பு நோயானது றேபீஸ் எனப்படும் வைரஸ் நோய்க்கிருமியினால் ஏற்படுகின்றது. இது விலங்குகள் மற்றும் மனிதர்களின் நரம்புத் தொகுதியினூடாக கடத்தப்பட்டு மூளை மற்றும் முண்ணானைத் தாக்குவதனால் இறுதியில் இறப்பு நிச்சயமாக்கப்படுகின்றது. இந்த நோய் மாடுகள், ஆடுகள், நாய்கள் மற்றும் பூனைகள் போன்ற வளர்ப்புப் பிராணிகளை மட்டுமன்றி, மனிதனையும் மிக இலகுவாகத் தாக்கு



கின்றது. அதாவது முலையூட்டிகளில் இந்த வைரசானது அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நீர்வெறுப்பு நோயினால் பாதிக்கப்பட்ட முலையூட்டிகளின் உமிழ்நீர்ச் சுரப்பில் இந்த வைரஸ் கிருமி வாழுகின்றது. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட விலங்கு ஒன்று இன்னொரு சாதாரண நோயற்ற விலங்கை/ மனிதனைத் தாக்கும்போது, அதன் உமிழ்நீரின் மூலம் இந்த றேபீஸ் வைரஸ் கிருமி கடத்தப்படுகின்றது. உதாரணமாக விசர்நாய்/ நீர்வெறுப்பு நோயினால் பாதிக்கப்பட்ட



நாய் மனிதனைக் கடிக்கும்பொழுது நாயினால் ஏற்படுத்தப்பட்ட காயத்தினூடாக விசர் நாயின் உமிழ்நீரிலுள்ள வைரஸ் கிருமி மனித உடலுள் செல்கின்றது.

கடத்தப்படுகின்ற வைரஸ் ஆனது நரம்புகளினூடாக முண்ணான் மற்றும் மூளையைச் சென்றடைகின்றது. நரம்புத் தொகுதியில் நன்கு பெருக்கமடைகின்றது.

அதுமட்டுமன்றி உடலில் காணப்படுகின்ற காயங்களினூடாகவும் கண் மென்சவ்வு மற்றும் மூக்குத்துவாரத்தினூடாகவும் வைரஸ்கள் கடத்தப்படுவதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

**ஆபத்தை அதிகளவில் 'கொண்டுள்ளவை**

நீர்வெறுப்பு நோய்க்கு எதிரான வக்சின் ஏற்றப்படாத கட்டாக்காலி மற்றும் தெருநாய்கள் மிகவும் ஆபத்தானவை. அத்தோடு தெருநாய்களோடு நட்பைப் பேணும் வளர்ப்பு மிருகங்களான நாய்கள், பூனைகள் மற்றும் பண்ணை விலங்குகள் அதிகளவில் இந்நோயினால் பாதிக்கப்படுவதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

அத்தோடு விலங்குகளோடு பழகுகின்றவர்கள் மற்றும் விலங்குகளுக்கு வேலை பயிற்றுவிப்பவர்களும் எச்சரிக்கையோடு இருத்தல் வேண்டும்.

**நீர்வெறுப்பு நோயின் வகைகள்**

1. ஆக்ரோச தன்மையுடைய நீர்வெறுப்பு நோய்
2. ஆக்ரோச மற்றதன்மையுடைய நீர்வெறுப்பு நோய்


ஆக்ரோசமான தன்மையுடைய நீர்வெறுப்பு நோயினால் பாதிக்கப்பட்ட முலையூட்டிகள் மிகவும் பரபரப்பாகவும் ஆக்ரோசமாகவும் பயங்கரமான தோற்றத்தை வெளிப்படுத்தக் கூடியவையாகவும் காணப்படும்.

ஆக்ரோசமற்ற நீர்வெறுப்பு நோயினால் பாதிக்கப்பட்ட முலையூட்டிகள் மிகவும் அமைதியாகவும் பசியற்றதாகவும் பயந்த சுபாவம் கொண்ட வையாகவும் காணப்படும். பொதுவாக இவை வெளியே அலைவதைத் தவிர்த்து மறைந்து வாழும்.

**நீர்வெறுப்பு நோயினால் பாதிக்கப்பட்ட நாயில் (விசர்நாய்) காணப்படும் பொதுவான அறிகுறிகள்**

- சாதாரண செயற்பாடுகளை விட வித்தியாசமான /வேறுபட்ட முறையில் அவற்றின் செயற்பாடுகள் தென்படுவதே இந்நோயின் அடிப்படை அறிகுறிகள் ஆகும்.
- பாதிக்கப்பட்ட நாய்கள் மிகவும் ஆக்ரோசமாக காணப்படும்/ சில நாய்கள் அமைதியாகக் காணப்படும்.
- சிலவேளைகளில் வாதத்தன்மையுடன் எழுந்து நடமாட முடியாது படுக்கையாகக் காணப்படும்.
- உணவு உட்கொள்ளமுடியாமலும் நீர் அருந்துவதற்கு முடியாமலும் இருக்கும்.
- சூழலில் தொடர்ச்சியாக பரபரப்பாக அலைவதைக் காணமுடியும்.
- மூக்கு மற்றும் வாயிலிருந்து நுரை / உமிழ்நீர் வெளியே வந்து கொண்டிருக்கும்

**வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகள்**




01. நாய்களை வளர்ப்பதற்கு தெரிவு செய்யும் போது அவற்றிக்கு நீர்வெறுப்பு நோய்களுக்கு எதிரான வக்சின் ஏற்றப்பட்டுள்ளதை உறுதிசெய்து கொள்ள வேண்டும். வக்சின் ஏற்றப்படவில்லையாயின் தகுந்த மிருக வைத்தியரின் அறிவுரைக்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டும்.

02.வளர்ப்பு நாய்களுக்கு வருடா வருடம் தடுப்பு வக்சின் ஏற்றலை ஒழுங்காக மேற்கொள்ளல் வேண்டும்.

03. வளர்ப்பு நாய்கள், தெரு நாய்கள் மற்றும் கட்டாக்காலி நாய்களுடன் பழகுவதைத் தடைசெய்யவேண்டும். பொதுவாக தெருநாய்களும் கட்டாக்காலி நாய்களும் தடுப்பு வக்சின் ஏற்றப்படாதவையாகவே கருதப்படுகின்றன.

04.வளர்ப்பு நாய்களை உங்கள் முழு அவதானிப்பில் உங்கள் வீட்டு வளவிலுள்ளேயே மட்டுப்படுத்தி வளர்க்கவும்.

**நீர்வெறுப்பு நோயினால் பாதிக்கப்பட்டநாய்கள்(விசர்நாய்) என சந்தேகிக்கப்படுகின்ற நாய்களினால் உங்கள் வளர்ப்பு நாய்கள் தாக் கப்பட்டால் மேற்கொள்ள வேண் டிய நடவடிக்கைகள்**

01. இரு மணித்தியாலங்களுக்கு மேல் அவற்றைத் தனிமைப்படுத்தி அவதானித்தல் வேண்டும்.

02. அதன்பின்னர் அவற்றில் ஏதாவது காயங்கள் உண்டா என்பதைப் பரிசோதிக்க வேண்டும்.

இதன்போது கையுறைகள் அணிந்திருத்தல் அவசியம். அத்தோடு உங்கள் வளர்ப்பு நாய்கள் உங்களை நக்குவதைத் தவிர்க்க வேண்டும். இதன்மூலம் மற்றைய நாய்களின் உமிழ்நீரின் மூலம் வைரஸ்கள் உங்களை அடைவதைத் தவிர்க்கமுடியும்.

வளர்ப்பு நாய்களில் ஏதாவது காயங்கள் ஏற்பட்டிருப்பின் மிருக வைத்தியரை அணுகி சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். இதன்மூலம் உங்களையும் உங்கள் வளர்ப்பு நாய்களையும் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

**நீங்கள் வளர்ப்பு நாயினால் /தெரு நாய்களினால் கடியுண்டால் மேற்கொள்ள வேண்டிய அவசியமான நடவடிக்கைகள்.**

01. உடனடியாக காயத்தைச் சவர்க்காரம் கொண்டு கழுவிச் சுத்தப் படுத்திக் கொள்ள வேண்டும்

02.பின்னர் வைத்தியரை அணுகி சிகிச்சை பெறல் வேண்டும்.

இந்நோய் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் வளர்ப்பு மிருகங்களை நீர்வெறுப்பு நோயிலிருந்து பாதுகாப்பதோடு நம்மையும் இதிலிருந்து பாதுகாப்போம்.

**நீர்வெறுப்பு நோய் விழிப்புணர்வு தினம் இன்று**

**சுகந்தி வைரமுத்து M.Sc**
(யாழ்ப்பாணம்)

# கார்மேல் போய்ஸ் அணி அபாரவெற்றி

(மானிப்பாய்)

கோப்பாய் அம்மன் கிரிக்கெட் கழகத்தால் நீலாம்பரி உணவக அனுசரணையுடன் நடத்தப்பட்ட அமரர் றீற்ரா அன்ரனி ஞாபகார்த்த 8 பேர் பங்குபற்றும் 7 பந்து பரிமாற்றம் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி அபார வெற்றி அடைந்தது.

இப் போட்டியில் உரும்பிராய் இந்து அணியை குருநகர் கார்மேல் போய்ஸ் அணி எதிர்கொண்டது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி 4 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் அனுஷன் 26 ஓட்டங்களையும் பவி 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

உரும்பிராய் இந்து அணியின் பந்துவீச்சில் பிரதீப் 2 இலக்குகளையும் கஜீ ஒரு இலக்கினையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு 77 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப் பாடிய உரும்பிராய் இந்து 5.1 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக் குகளையும் இழந்து 29 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் உரும் பிராய் இந்து சார்பில் கஜீ 12 ஓட்டங்களை யும் கஜந்தன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சார்பில் றொகஷன் 1.1 பந்து பாரிமாற்றத்தில் 2 ஓட்டங்களை மாத் திரம் கொடுத்து 3 இலக்குகளை கைப் பற்றினார்.

இதனடிப்படையில் குருநகர் கார் மேல் போய்ஸ் அணி உரும்பிராய் இந்து அணியை 47 ஓட்டங்களால் வெற்றி பெற்று வெற்றி கிண்ணத்தை தனதாக்கி கொண்டது.



போட்டியின் ஆட்டநாயகனாக 12 பந்துகளில் 33 ஓட்டங்களை பெற்ற குருநகர் கார்மேல் போய்ஸ் அணியின் பவியும் தொடர் நாயகனாக குருநகர் கார்மேல் போய்ஸ் அணியின் தேசிகனும் தெரிவாகினர்.

கே.மதுஷன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக மதுரம் இயக்குநர் எஸ்.கே. கிருபாகரன் மற்றும் கே.அன்ரனி ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களையும் வெற்றிக் கிண்ணங் களையும் வழங்கி வைத்தனர். (அ-5-23)

# வாக்குச்சீட்டுக்கள் கண்டெடுப்பு; சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது

## ஹரின் எம்.பி. தெரிவிப்பு

(புத்தளம்)

புத்தளம் புனித அன்ரூ கல்லூரியில் கண்டெடுக்கப்பட்ட வாக்குச் சீட்டு தொகை சம்பந்தமாக பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியன் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் தயாசிறி ஜயசேகர கணனி விளையாட்டு பற்றி கூறியதே இந்தச் சந்தேகத்திற்கு காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், புத்தளத்தில் வாக்குச்சீட்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறியதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்கு காரணம் கற்பிக்கவில்லை. சுய விமர்சனம் செய்து வருகிறோம். கட்சிக்குள் கிளர்ச்சி செய்யப் போவதில்லை. கட்சியில் உள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்கிறோம்.

அதேவேளை, நடந்து முடிந்த தேர்தல் தந்தை மற்றும் புதல்வர்களின் தேர்தல். தேர்தலில் முதுகெலும்புடன் மக்கள் வாக்களித்துள்ளனர் என்றார். (அ-2)

# தேர்தல் பெறுபேறுகள்... அரசு மக்களுக்கு இழைத்த தவறுகளுக்கான பதில் !

## இது ஒரு ஆய்வுக்களம்

-சமுதாய சிற்பிகள் அமைப்பு

போர் முடிவுற்ற கணத்தோடு இலங்கையில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் தமது அடுத்தகட்ட நிலை தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர். குறிப்பாக, தமிழ் மக்கள் தமக்கான அரசியல் எதிர்காலம் தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர்.

இவ்வார இறுதியில் இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 38 ஆசனங்களில் 30 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இதில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது ஏழு ஆசனங்களையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டது.

ஆகஸ்ட் 2009 இல் யாழ்ப்பாணத்தில் மாநகரசபைத் தேர்தல் நடைபெற்றது. இதில் 50.7 சதவீத வாக்குகளை ஆளும் கூட்டணி பெற்றுக் கொண்டதுடன் 23 ஆசனங்களில் 13 ஆசனங்களைத் தனதாக்கிக் கொண்டது.

2010-இல் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றபோது, யாழ் மாவட்டத்தின் பத்து தேர்தல் தொகுதிகளில் 9 தொகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை வெற்றியை பெற்றுக் கொண்டது. யாழ்ப்பாணத்தில் ஒட்டுமொத்தமாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது 44 சதவீத வாக்குகளையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது, 32 சதவீத வாக்குகளையும் பெற்றுக்கொண்ட அதேவேளையில், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் பகுதியான, கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 45.51 சதவீத வாக்குகளையும் ஆளும் கூட்டணியானது, 36.55 சதவீத வாக்குகளையும் பெற்றுக்கொண்டது.

யூலை 2011 இல், உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. 16 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இடம் பெற்றதில், தமிழ் தேசியக் கூட்டமைப்பானது, 13 சபைகளில் வெற்றி பெற்றது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோட்டையாக விளங்கிய வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு ஆகிய உள்ளூராட்சி சபைத் தொகுதிகளில் சிறிலங்கா ஆளும் கூட்டணி வெற்றிபெற்றது. ஒட்டுமொத்தமாக இத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 63 சதவீத வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது 34 சதவீத வாக்குகளையும் பெற்றன.

செப்ரெம்பர் 21, 2013 இல் இடம் பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 82.8 சதவீத வாக்குகளையும் ஆளும் கூட்டணியானது 16.1 சதவீத வாக்குகளையும் பெற்றன. மேற்கூறப்பட்டுள்ள தேர்தல் பெறுபேறுகள் எவ்வாறான போக்கைக் கொண்டுள்ளன என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வாக்குகள் அதிகரித்துள்ளதையும் காண்பிக்கின்றன. இந்தத் தேர்தலில் ஆளும் அரசாங்கமானது, தான் தோல்வியுற்றுள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, இலங்கையில் நவம்பரில் நடைபெறவுள்ள பொது நலவாய அமைப்பின் அரசாங்கத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாடு மற்றும் மார்ச் 2014 இல் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வு போன்றவற்றில் அனைத்துலக சமூகத்தால், மேற்கொள்ளப்படும் அழுத்தங்களிலிருந்து இலங்கை தப்பிப்பதற்கு இத்தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.

இத்தேர்தலில் இலங்கை அரசாங்கமானது, மிகப் பெரிய தோல்வியை அடைந்துள்ளது என்பதை கற்பனை செய்து பார்ப்பதென்பது அவர்களுக்கு கடினமாக இருக்கும்.

2009 இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நகரசபைத் தேர்தலில் இலங்கை அரசாங்கம் வெற்றி பெற்றதற்கும் தற்போது இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் இலங்கை அரசாங்கம் தோல்வியடைந்தமைக்கும் இடையிலான மிகப்பெரிய வேறுபாட்டை அனைவரும் அறிந்துகொள்ள முடிகிறது. 2009 இல் 50.7 சதவீத ஆதரவைப் பெற்றிருந்த இலங்கை அரசாங்கத்திற்கான ஆதரவானது தற்போது 16.1 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

போர்முடிவுற்ற கணத்தோடு, இலங்கையில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள், தமது அடுத்த கட்ட நிலை குறித்து குழப்பம் அடைந்திருந்தனர். குறிப்பாக தமிழ் மக்கள் தமக்கான அரசியல் எதிர்காலம் தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர்.



இலங்கை அரசாங்கமானது, தமிழ் மக்களிற்கு அரசியற் தீர்வொன்றை வழங்கி, நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக வாக்குறுதி வழங்கியபோதிலும், தமிழ் மக்கள் தமக்கான அடுத்தகட்ட அரசியல் நகர்வு எவ்வாறிருக்கும் என்பதில் தெளிவான தீர்மானத்தை எடுக்க முடியாது குழம்பினர். *நாங்கள் இதயபூர்வமாக வாக்களிப்பதானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே வாக்களிப்போம். அழுத்தத்தின் பேரில் வாக்களிக்கவேண்டுமெனில் ஐக்கிய மக்கள் சுத்திரக் கூட்டணிக்கே வாக்களிப்போம்* என ஜூலை 2009-ல் மக்கள் சிலர் தெரிவித்திருந்தனர்.

இலங்கயின் வடக்கு வாழ் மக்களின் வாழ்வியலின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் இலங்கை இராணுவத்தின் தலையீடுகள் காணப்படுகின்றன. இங்கு அதிகாரங்கள் மத்தியமயப்படுத்தப்பட்டுள்ளன. தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளுக்கு தமிழ் சமூகம் உட்பட்டுள்ளது. தவிர, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக் கோட்பாடுகள் போன்றவற்றில் தமிழ் மக்கள் பாரபட்சப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், போருக்குப் பின்னான சூழலில், தமிழ்மக்கள் கௌரவத்துடனும், அமைதியுடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்கி, தமிழ் மக்கள் சமமாக மதிக்கப்படுவதற்கான சூழ்நிலையையும் உருவாக்க வேண்டிய தருணத்தை அரசாங்கம் கொண்டிருந்தது. ஆனால், இந்த அரசாங்கம், தமிழ் மக்களின் உரிமையை மதித்து அவர்களை சமமாக நடாத்தத் தவறிவிட்டது. எவ்வாறான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும், இந்த அபிவிருத்தி, மக்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு ஈடாகாது என வடக்கில் வாழும் தமிழ் மக்கள், இந்தத் தேர்தலின் ஊடாக ஆளும் அரசாங்கத்திற்கு ஒரு தெளிவான செய்தியினை வழங்கியுள்ளனர்.

வடமாகாணசபையில் பெற்றுக் கொண்ட வெற்றியானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான மிகப் பெரிய வெற்றியாகும். தற்போதைய அரசாங்கத்தின் கோட்பாடுகளால் தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் அதிருப்தியடைந்துள்ளனர் என்பதைப் பிரதிபலிக்கின்ற ஒன்னறாகவே இத்தேர்தல் பெறுபேறுகள் அமைந்துள்ளன. இது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி தொடர்பான ஒரு கருத்து வாக்கெடுப்பாகவும் காணப்படுகிறது.

முதற்தடவையாக, மாகாணசபை அரசாங்கத்தை அமைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இது ஒரு சவாலாக இருக்கும். இதனை ஆட்சி செய்வதென்பது, மிகவும் கடினமானதாக இருக்கும். மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களை நீர்த்துப்போகச் செய்வதற்கான நடவடிக்கையை இலங்கை அரசாங்கம், முன்னெடுக்கின்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த மாகாணசபை நிர்வாகத்தை மிகவும் சவாலுடன் நடாத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, மூலோபாயத்துடன் யதார்த்தமாக நடந்துகொள்ள வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் கூட்டமைப்பானது, தமக்குள் சண்டையிட்டுக் கொண்டால், அது கொழும்பிலுள்ள அரசாங்கத்திற்கு மேலும் பலம் சேர்க்கும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இந்நிலையில் கூட்டமைப்பானது, தனது கையில் ஒப்படைக்கப்பட்ட இந்த வரலாற்றுக் கடமையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

# தாயக மக்கள் தாம் தனித்துவமான இனம் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்

## நாடு கடந்த அரசின் பிரதமர் உருத்திரகுமாரன்

(கொழும்பு)

**இனப்படுகொலைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையிலும் தங்களுடைய சுதந்திர தாகம் தணியவில்லை என்பதனை தாயக மக்கள் உலகுக்கு தெட்டத் தெளிவாக கூறியிருக்கின்றார்கள் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் முழக்கமிட்டுள்ளார்.**

ஐ.நாவின் வருடாந்த கூட்டத் தொடரில் பங்கெடுப்பதற்கு நியூயோர்க் பயணித்துள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகையை மையப்படுத்தி ஐ.நா. முன்றலில் பொங்கு தமிழென சங்கே முழங்கு என்ற முழக்கத்துடன் இடம்பெற்றிருந்த பொங்கு தமிழ் எழுச்சி ஒன்றுகூடலில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ᥒ வடமாகாண சபைத் தேர்தலில் தாயக மக்கள் வெளிப்படுத்திய விடுதலை வேட்கையின் தன்னெழுச்சி தந்த மனவெழுச்சியின் தொடர்ச்சியாக ஐ.நா. முன்றலில் சுதந்திர தமிழீழத்துக்கான இந்த முழக்கம் வட அமெரிக்கத் தமிழர்களால் முழங்கப்பட்டது.

தாயக மக்கள் நாங்கள் தனித்துவமான இனம், எங்களுக்கென்று பாரம்பரிய தாயகம் உண்டு, எங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதனை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தமிழர்களுக்கான அரசியல்வெளி முழுமையாக அங்கு இல்லாத காரணத்தினாலும் இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் சுதந்திர தமிழீழ கோரிக்கையினை தடை செய்கின்ற காரணத்தினாலும் தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் அபிலாசையினை முழுமையாக வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இல்லை.

இந்நிலையில் தமிழ் தேசத்தின் அரசியல் அபிலாசைகளை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய பாரிய தார்மீக கடமைப்பாடு புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் தோள்களின் மீதுதான் வரலாறு சுமத்தியுள்ளது.

அதனை செவ்வனே செய்வதற்கு நாம் என்றுமே தயாராக இருக்க வேண்டும். எங்கள் வரலாறு எங்கள் மேல் இட்டுள்ள கடமைப்பாட்டை செய்ய வேண்டிய கடப்பாட்டுக்கு நாம் உரியவர்கள். இன்றைய நிலைப்பாடுகள் எங்களுடைய விடுதலைக்கு சாதகமாக வருகின்றன. உலக மயமாதலும் தொழில் நுட்ப முன்னேற்றங்க ளும் இதற்கு வழிகோலுகின்றன.

தாயகத் தமிழ் மக்கள், புலத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள், உலகத் தமிழ் மக்கள், தமிழக தமிழ் மக்கள் அனைவரும் ஈழத்தின் சுயநிர்ணய உரிமையினை, பரிகார சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திர தமிழீழம் அமைப்பதற்கு நாம் ஒன்றுபட்டு உழைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தொழிலாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் நிர்மாணத்துறை பொறியியற் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு பயிற்சி பெற்ற தொழிலாளர் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படமால் ஆகக் குறைந்தது இரு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் 30 ஆம் திகதி 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

கடந்த 20 ஆம் திகதி வெளியாகியுள்ள வர்த்தமானிப் பத்திரிகை க்கு அமைவாக ஏ 4 தாளில் சுயமாக தயாரித்த விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியைக் குறிப்பிட்டு தொழிற்சாலை பொறியியலாளர், அரசாங்கத் தொழிற்சாலை, கொலென்னாவ என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை கடந்த 20 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (அ-7)

# பதவி உயர்வுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பாதுகாப்பு உதவியாளர் (கட்டடக்கலை/தொழில்நுட்ப அலுவலர்) பதவியின் விசேட வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொல்பொருள் திணைக்களத்தில் தற்போது பணியாற்றுகின்ற அல்லது வெற்றிடத்தினத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இளைப்பாறிய அலுவலர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் இலங்கை தொழில் நுட்ப சேவையில் பாதுகாப்பு உதவியாளர் (கட்டடக்கலை /தொழில் நுட்ப உதவியாளர்) முதலாம் வகுப்பில் 6 வருட சேவைக் காலத்தையும் வெற்றிடத் திகதிக்கு முன்னரான 5வருட சேவைக் காலத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்துக்கு அமைய சுயமாக தயாரித்த விண்ணப்பத்தை விண்ணப்பதாரர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் பிரிவுத் தலைவரூடாக பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப படிவம் தொடர்பான மேலதிக விபரங்களை கடந்த 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (அ-7)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு திட்டம் அவசியம்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



சட்டத்தரணி பி.ஜே.அன்ரனி சமாதான நீதவானாகவும் மல்லாகம் நீதிமன்ற நியா யாதிக்கத்துக்குட்பட்ட உத்தியோகப்பற்றற்ற நீதவானாகவும் மல்லாகம் மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டதைப் படத்தில் காணலாம்.

வடக்கில் தேர்தல் நடத்தியமைக்காக அரசாங்கத்திற்கு நன்றி பாராட்டுகிறேன். தேர்தல்களை நடத்துவதன் மூலம் மட்டும் வடக்கில் ஜனநாய கத்தை நிலைநாட்டிவிட முடியாது.

ஜனநாயகத்தை நிலைநாட்டும் முதற்கட்டமாகவே தேர்தல் நடத்தப்படுவதை கருத வேண்டும். 1956 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் தங்களது ஜனநாயக விருப்பங்களைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் பகிரப்பட வேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கையாகும். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண் டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நிலைப்பாடாகவும் அமை ந்துள்ளது

ஆயினும் அரசியல் சாசனத்தில் காணப்படும் உரிமைகளை புறக் கணிப்பதற்கு அரசாங்கம் முயற்சி த்து வருகிறது. ஒரு இன சமூகத்திற்கு மட்டும் அதிகாரத்தை வரையறுப்பதன் மூலம் நாடு பிளவுபடுவதனைத் தவிர்க்க முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தேசிய நல்லிணக்கம் நோக்கி நிலையாக பயணியுங்கள்

## இலங்கையை வலியுறுத்துகிறது ஜப்பான்

வடமாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து தேசிய நல்லிணக்கம் நோக்கிய நிலையான பயணத்திற்கு ஜப்பான் இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தல் பெரும்பாலும் அமைதியான முறையில் நடைபெற்றமையை வரவேற்பதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பல வருடகால மோதல்களின் பின்னர் தேசிய நல்லிஹைக்க செயற்பாட்டில் இந்தத் தேர்தல் ஒரு குறிப்பிட்டத்தக்க முன்னேற்றம் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தேசிய ஒருமைப்பாட்டை நோக்கி சீரான முன்னேற்றப் பாதையில் செல்லும் எனவும் ஜப்பான் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. இலங்கை தனது தேசிய ஒருமைப்பாட்டுடன் கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இலக்கை அடை யும் நோக்கத்திற்கு, ஜப்பான் தொடர்ந் தும் தனது ஆதரவை வழங்கி வரும் எனவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# நன்னடத்தை பிரிவில் வருடாந்தம் 3000 பேர்

(கொழும்பு)

வருடாந்தம் 2 ஆயிரத்து 700 முதல் 3 ஆயிரம் வரையான சிறுவர்கள் நன்னடத்தைக்கு உட்படுத்தப்படுவதாக சிறுவர் நன்னடத்தைகள் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

துஷ்பிரயோக சம்பவங்கள் காரணமாகவே அதிகமானோர் நன் னடத்தைக்கு உட்படுத்தப்படுவதாக நன்னடத்தைகள் ஆணையாளர் யமுனா பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல்வேறு திருட்டுகள், போதைப் பொருள் விற்பனைக்காக சிறுவர்களை ஈடுபடுத்தல், பெற்றோர்களால் கைவிடப்படல் மற்றும் சிறுவர்களை தொழில்களில் ஈடுபடுத்துதல் போன்ற காரணங்களாலும் சிறுவர்கள் நன்னடத்தைக்கு உட்படுத்தப்படுவதாக ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும்பாலான பெற்றோர்களின் கவனயீனம் காரணமாகவே பிள்ளைகள் நன்னடத்தைக்கு உட் படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலைமையை மாற்றுவதற்காக பெற்றோர்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற காங்கிரசை வெளியேற்ற வேண்டும்

## நரேந்திரமோடி ஆவேசம்

**அழிவுப்பாதையில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமானால் காங்கிரசிடமிருந்து நாட்டுக்கு விடுதலை வேண்டும் என குஜராத் முதல்வரும் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளருமான, நரேந்திரமோடி ஆவேசமாக உரையாற்றியுள்ளார்.**



அவர் மேலும் கூறுகையில்,

தமிழகமும், குஜராத்தும் கடலோர எல்லை மாநிலங்கள் என்பதால் ஒரே மாதிரியான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. குஜராத் மீனவர்கள் பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர். படகுகளைப் பிடித்து வைத்துக் கொண்டு இந்தியாவுக்கு எதிரான வேலைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். அதுபோல தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு கொடுமைக்குள்ளாக்கப் படுகின்றனர்.

மத்தியில் பலவீனமான அரசு இருப்பதால் இந்திய மீனவர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற துணிச்சல் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் ஏற் பட்டுள்ளது.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது தமிழக மீனவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று சொன்னார்கள். அப்போது குஜராத் மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும் 15 நாட்களுக்குள் விடுதலை செய்யப்படும் நிலை இருந்தது. ஆனால், இப்போது 6 மாதங்களானாலும் விடுவிக்கப்படுவதில்லை.

இந்திய மீனவர்கள் சுதந்திரமாக மீன் பிடித் தொழிலைச் செய்ய வேண்டுமானால் காங்கிரஸ் தலைமையிலான பலவீனமான அரசை அகற்ற வேண்டும்.

**மனமோகன் சிங்கிற்கு துணிவு இல்லை**

நமது இராணுவ வீரர்களின் தலையைத் துண்டித்து அனுப்புகிறது பாகிஸ்தான் இராணுவம். ஆனால், நமது பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தான் பிரதமரோடு சிக்கன் பிரியாணி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

தமது நாட்டை அமெரிக்கா உளவு பார்ப்பதாக தகவல் வந்ததும், அந்நாட்டுக் குழுவை அனுமதிக்க மாட்டோம் என பிரேசில் உறுதியுடன் அறிவித்தது. அது போல அமெரிக்க உளவுத் தகவல்களை வெளியிட்ட ஸ்நோடனுக்கு அடைக்கலம் கொடுப்பதால் ரஷ்யாவுக்கு செல்ல மாட்டேன் என அமெரிக்க ஜனாதிபதி அறிவித்தார்.


இதுபோன்ற துணிச்சல் நமது பிரதமருக்கு இல்லாது போனது ஏன்?.

காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை. எனவே, இந்த ஆட்சியை தூக்கி எறிய வேண்டும். நாடு விடுதலை அடைந்ததும் காங்கிரசை கலைத்து விடுமாறு மகாத்மா காந்தி கூறினார். மகாத்மாவின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கடமை இளைஞர்களாகிய உங்களுக்கு உள்ளது.

நாட்டைக் காப்பாற்ற வேண்டுமானால் காங்கிரஸ், அதன் கூட்டணிக் கட்சிகள், அவர்களுக்காக தரகு வேலை பார்ப்பவர்கள் ஆகியோரிடம் இருந்து நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்றார். (2)

# லைபீரிய முன்னாள் ஜனாதிபதிக்கு 50 ஆண்டுகள் சிறைத் தண்டனை

## சர்வதேச நீதிமன்றம் உறுதி



போர்க்குற்ற வழக்கில் லைபீரிய முன்னாள் ஜனாதிபதிக்கு 50 ஆண்டுகள் சிறைத் தண்டனையை சர்வதேச நீதிமன்றம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

ஆபிரிக்க கண்டத்திலுள்ள லைபீரியா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சார்லஸ் ஜி டெய்லர் (வயது 65) என்பவர் லைபீரியாவின் வடக்கு பகுதியிலுள்ள அயல் நாடான சியார் ராலியோன் மீது இராணுவம் மூலம் போர் தாக்குதல் நடத்தினார்.

அப்போது, கொலை,கொள்ளை, பாலியல் பலாத்காரம், இராணுவத்தில் சிறுவர்களை சேர்த்தல் மற்றும் ஆயிரக்கணக்கான பொது மக்களை கொன்று குவித்தல், துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்களை வாங்க, வைரங்களை விலைக்கு வாங்குதல் போன்ற போர்க் குற்ற ங்களை அவர் செய்தார்.

இச்சம்பவம் கடந்த 1996 முதல் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடந்தது. போர்க் குற்றத்தில் ஈடுபட்டதற்காக அவர் மீது ஹாகூலிலுள்ள சர்வதேச நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த 2012 ஆம் ஆண்டில் அவருக்கு 50 வருட சிறைத் தண்டனை விதித்தது.

இதை எதிர்த்து முன்னாள் ஜனாதிபதி சார்லஸ் ஜி டெய்லர் சர்வதேச சிறப்பு நீதி மன்றில் அப்பில் செய்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு நீதிமன்றில் எடுக்கப்பட்டு நேற்று முன்தினம் தீர்ப் பளிக் கப்பட்டது.

அதில் போர்க்குற்றம் இழைத்த டெய்லருக்கு 50 ஆண்டுகள் சிறைத் தண்டனையை நீதிபதிகள் உறுதி செய்தனர். (அ-2)

# மலையேறிய நபருக்கு கிடைத்தது அதிர்ஷ்டம்



ஆல்ப்ஸ் மலையில், பிரான்ஸ்-இத்தாலி நாட்டு எல்லையில் அமைந்துள்ள சிகரத்தில் ஏறிய பிரான்ஸ் நாட்டு வாலிபர் ஒருவருக்கு திடீர் அதிரஷ் டம் அடிததது.

பனிக்கட்டியாலான அந்த சிகரத்தில் சிரமத்துடன் ஏறிய அவருக்கு பழங்கால பெட்டியில் விலை உயர்ந்த ஆபரண கற்கள் அடங்கிய புதையல் கிடைத்தது. அந்த பெட்டியில் இருந்த மரகதம், மாணிக்கம் மற்றும் நீல நிற கற்களின் மதிப்பு 2 கோடி ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

யாருக்கும் தெரியாத நிலையில், அந்த அபூர்வ புதையலை அவர் தனது வீட்டிற்கு எடுத்துச்சென்று இருக்கலாம். ஆனால், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அந்த புதையலை அந்த வாலிபர் ஒப்படைத்து விட்டார்.

குறித்த கற்கள் இந்தியாவில் செய்யப்பட்டவை என்று பொறிக்கப்பட்டு இருந்தது.

50 ஆண்டுகளுக்கு முன்பு கடந்த 1950 மற்றும் 1966 ஆம் ஆண்டுகளில் இரு ஏர் இந்தியா விமானங்கள் அந்த மலைச்சிகரத்தில் மோதி சிதறின. அதில் பயணம் செய்தவர்கள் அனைவரும் உயிர் இழந்து பனிப்பாறைக்குள் சமாதி ஆனார்கள்.

அந்த பயணிகளின் உடைமைகளும் அவர்களுடன் புதைந்துவிட்டன. தற்போது மலையேறும் வாலிபரிடம் கிடைத்தது அந்த பயணிகளில் ஒருவருடையதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அது குறித்து இந்திய அரசுக்கு பிரான்சு அரசு தகவல் கொடுத்து அந்த பெட்டி பற்றிய விபரங்களை கேட்டுள்ளது.

இந்தியாவில் அந்த புதையலுக்கான உரிமையாளர் கண்டு பிடிக்கப்படாவிட்டால் பிரான்சு நாட்டு சட்டப்படி அதைக் கண்டெடுத்த மலையேறும் வாலிபருக்கே அது சொந்தமாகிவிடும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# 5 மாடிக் கட்டடம் இடிந்தது; 60 பேர் நசியுண்டு தவிப்பு



(மும்பை)

மும்பை மாநகராட்சிக்குச் சொந்தமான குடியிருப்பு ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் இடிபாடுகளில் சிக்கி 60 பேர் நசியுண்டனர். மும்பையில் ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து தரைமட்டமானது. இதில் இடிபாடுகளில் சிக்கி தவிக்கும் 60 பேர் நசியுண்டனர். இந்த குடியிருப்பு கட்டடத்தில் மாநகராட்சி ஊழியர்கள் வசித்து வந்தனர். இது 60 ஆண்டு பழைமையான கட்டடம் என்றும் பராமரிப்பு இன்றி மோசமான நிலையில் இருந்தது.

நேற்றுக் காலை 6.25 மணி அளவில் திடீரென குறித்த கட்டடம் இடிந்து விழுந்தது. அப்போது கட்டடத்தின் உள்ளே 50 முதல் 60 பேர் வரை இருந்ததாக கூறப்படுகிறது. அவர்கள் இடிபாடுகளில் சிக்கி தவித்ததாகத் தகவல் அறிவிக்கப்பட்டது.

உடனே பொலிஸாரும் தீயணைப்பு படையினரும் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். மும்பையின் பல்வேறு இடங்களில் இருந்து 12 தீயணைப்பு வண்டிகளில் வீரர்கள் வரவழைக்கப்பட்டு மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நான்கு நோயாளர் காவு வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வீரர்கள் இடிபாடுகளை அகற்றி 4 பேரை மீட்டனர். உடனடியாக அவர்கள் அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். (2)



அமெரிக்கா பயணித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் நியூயோர்க்கில் அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி ஜோன் கெர்ரியுடன் சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.

# அருச்சுனனுக்கு கிடைத்த மாங்கனியும் கூட்டமைப்புக்கு கிடைத்த போனஸ் கனியும்



பாரத இதிகாசத்தில் நமக்கு மிகுந்த விருப்பு. ஆனாலும் திரௌபதியைப் (பாஞ்சாலி) பாண்டவர்கள் நடத்திக்கொண்ட முறையால் அந்த விடயத்தில் மட்டும் நமக்கு இனம்புரியாத வெறுப்பு.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கவியல் தத்துவம் உலகம் முழுவதற்கும் பொதுவானதும் ஏற்புடையதுமாகும். அத்தகைய உயரிய ஒழுக்கவியல் கோட்பாட்டை பாண்டவர்கள் உடைத்தெறிந்தமை வேதனைக்குரியதே.

மானிட வாழ்வில் தவறுகள், பிழைகள் நடப்பது வழமை. அதற்காக தவறுகளை நியாயம் என்று வாதிடுவதோ அல்லது அதை நியாயப்படுத்த முற்படுவதோ ஏற்புடையதன்று.



பிழை என்றால் அது எங்கு நடந்தாலும் பிழைதான். அதைவிடுத்து பாண்டவர்கள் தர்மத்தின்வழி நிற்பவர்கள் என்பதற்காக, திரௌபதியை அவர்கள் தங்கள் போகப்பொருளாகப் பயன்படுத்திக்கொண்டமை தர்ம வாழ்வுக்கு இழுக்கு.

## நடந்தது என்ன?

அருச்சுனனுக்கே திரௌபதி கிடைக்கப்பெற்றாள். அந்தச் செய்தியைத் தன் தாய் குந்தி தேவிக்குக் தெரியப்படுத்த முற்பட்ட அருச்சுனன் தாயே! ஒரு மாங்கனியைக் கொண்டு வந்துள்ளேன் என்றான்.

மாங்கனி என்பதன் பொருள் உணராத குந்திதேவி மகனே! நீ கொண்டு வந்த மாங்கனியை உன் சோதரன் ஐவருமாக உண்க! என்றாள்.

கலக்கமும் சிக்கல்களும் ஏற்படுவதற்கான திருவிளையாடல்களே இந்த உலகில் அதிகம். ஒருமுறை சிவபிரானிடம் மாங்கனி ஒன்றைக் கொண்டு சென்றார் நாரதர். பிரபு! இது கிடைத்தற்கரிய மாங்கனி என்பதால் இதைத் தங்களிடம் தந்துவிட எண்ணி வந்தேன் என்றார்.

அற்புதமான மாங்கனி என்பதால் அதை ஒருவர் மட்டுமே உண்ண வேண்டும் என்று சிவபிரான் தீர்மானிக்கிறார். அதை நாரதரும் ஆதரிக்கிறார். இங்குதான் குழப்பமே ஆரம்பிக்கிறது.

நாரதர் தந்த மாங்கனியை கணபதியும் கந்தனும் ஆளுக்குப் பாதியாக எடுத்துக்கொள்ளுங்கள் என்றால் பிரிவினைக்கும் தனிநாட்டுக் கோரிக்கைக்கும் இடமில்லையல்லவா?

ஆனால், இருவரில் ஒருவருக்கே அந்த மாங்கனியைக் கொடுக்க முடியும் என்று முடிவாகிவிட்டது. இதன் முடிவாக கந்தப்பெருமான் ஆண்டிக்கோலம் பூண்டு தனக்கொரு ஆட்சி, தனக்கொரு நாடு என்பதாக பழனியை தோற்றுவித்தார்.

நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பதால் அதிகௌரவத்திற்குரிய சிவபிரானின் குடும்பம் தப்பிக்கொண்டது.

எதுவாயினும் பார்வதி பரமேஸ்வரன் தம்பதிகளின் வீட்டில் மாங்கனியை பிரிக்கக்கூடாது என்பதால் பிரச்சினை.

குந்திதேவி வீட்டில் மாங்கனியை ஐவருமாகப் பிரித்து உண்ணுங்கள் என்பதால் திண்டாட்டம்.

கடவுளே! சிவனின் வீட்டில் மாங்கனியைப் பிரிக்கக்கூடாது என்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை குந்திதேவி வீட்டிலும் மாங்கனியைப் பகுத்து உண்ணுங்கள் என்று குந்திதேவி வீட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை சிவபிரானின் வீட்டிலும் எடுத்திருந்தால் பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது.

என்ன செய்வது நாடகம் நடந்துவிட்டது. குந்திதேவியின் சொல்லுக்காக அருச்சுனன் கொண்டுவந்த திரௌபதி எனும் மாங்கனி ஒருவருக்கு ஒருவருடம் என்றவாறு பஞ்ச பாண்டவரின் அனுபவிப்புக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஒருவருக்கு ஒருவருடம் என்ற உதவத்த தீர்மானத்தின் காரணமாகவோ என்னவோ அருச்சுனன் சுபத்திரையையும் வீமன் இடும்பியையும் எட்டிப் பார்த்தனர் என்று நாம் நினைத்துக்கொண்டாலும் அது தொடர்பில் எந்தக் குற்றத்தையும் எங்களிடம் காணமுடியாது.

## கூட்டமைப்புக்கு கிடைத்த போனஸ் கனி

அருச்சுனன் வில்லுடைத்து வென்றதால் அவனுக்கு திரௌபதி என்ற மாங்கனி கிடைத்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத் தேர்தலில் வின் பண்ணியதால் இரண்டு போனஸ்கனி.


இரண்டில் ஒரு கனியை முஸ்லிம் சகோதரருக்குக் கொடுப்பதென முடிவு. அடுத்த கனியை என்ன செய்வது? அதை யாருக்குக் கொடுப்பது.

ஒரு வாழைக் கனியோடு இன்னொரு கனி இருந்திருந்தால் கவுண்டமணியிடம் அடிவேண்டும் அவலம் செந்திலுக்கு ஏற்பட்டிருக்காது.

ஆனால் இங்கோ இரு போனஸ் கனி இருப்பதால்தான் பிரச்சினையே.

ஒரு போனஸ் ஆசனம் என்றால் அதை முஸ்லிம் சோதரருக்குக் கொடுத்துவிட்டு சம்பந்தன் ஐயா நிம்மதியாக இருந்திருப்பார். ஆனால் இரண்டு போனஸ் ஆசனம். இதில் ஒன்றுக்கு முடிவு கட்டிவிட, மற்றையது மகா தலையிடியாகிவிட்டது.

எனக்கு உனக்கு என்று கோஷங்கள் எழத்தொடங்க, அதில் கூட்டமைப்பின் அத்திபாரமே ஆட்டம் காணும் போல இருக்கிறது. எஞ்சியுள்ள ஒரு போனஸ் ஆசனத்தை யாருக்குக் கொடுப்பது என்ற முடிவை



எடுப்பதில் இடர்பாடுகள் ஏற்படலாம் என்பது உண்மை.

ஒருவருடத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் ஐந்து வருடங்கள் ஐந்துபேருக்கு என்றவாறான ஒரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சுருங்கக்கூறின் கூட்டமைப்பின் போனஸ் ஆசனம் திரௌபதியின் நிலைக்குக் கொண்டுவரப்படுகின்றது. அதாவது எங்ஙனம் திரௌபதி ஒருவருடம் ஒருவருடன் என்றவாறு ஐவருடனும் காலம்கடத்தியதுபோல போனஸ் ஆசனமும் ஒரு வருடம் ஒருவருக்கு என்றவாறு கைமாறவுள்ளது.

இத்தகையதொரு யோசனை சமாளிப்புக்காயினும் அது பல



பிரச்சினைகளை ஏற்படுத்தும். அதில்

- பதவியேற்பதற்கு முன்னதாகவே குறித்த உறுப்பினரிடம் ஒரு வருடகால முடிவுக்குரிய திகதியிட்டு இராஜினாமாக் கடிதத்தை பெற்று வைத்திருத்தல்வேண்டும்.
- ஒரு வருடமுடிவில் பதவி விலகும் உறுப்பினர் நிச்சயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் விசுவாச மற்றவராக மாற்றமுறுவார்.
- ஒரு வருடத்திற்கு ஒருவர் என்ற தீர்வு முறையானது உறுப்பினர்களின் இலாபம் கருதியதானதே தவிர, அவர்கள் யாராலும் மக்கள் பணி செய்யமுடியாது. அதற் குப் பதவிக்காலமும் போதாது.
- ஒருவருக்கு ஒருவருடம் என்ற இந்த யோசனையை ஏற்றுக்கொள்ள எல்லோரும் தயாராக இருப்பார்கள் என்று கூற முடியாது. இந்நிலையில் கட்சி மீதான வெறுப்புக்கள் வெளிப்படத் தொடங்கும்.

**- விதுரன்**

எனவே போனஸ் ஆசனம் ஒருவருக்கே வழங்கப்படவேண்டும். அதுவே நியாயமானது. இதை யாருக்கு வழங்குவது என்பதை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அனைத்துப் பிரதிநிதிகளும்கூடி ஆராய்ந்து முடிவு செய்யலாம்.



# அடிப்படை தேவைகளை காணாத தட்டுவன்கொட்டி கிராம மக்கள்

(புளியம்பொக்கணை)

**கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தட்டுவன்கொட்டி கிராம மக்களுக்கு அடிப் படை வசதிகள் எவையும் ஏற்படுத்தி கொடுக்கப்படாமை யால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர்.**



கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டு 100 குடும் பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன.

இங்கு குடிநீர்த் தட்டுப்பாடு பெரிய தொரு பிரச்சினையாக காணப்படு கின்றது.

ஒரு பொதுக்கிணறு மட்டுமே இங்குள்ளதுடன், அக்கிணற்றிலும் தண்ணீர் வற்றி காணப்படுகின்றது. இதனால் குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை பெறவேண் டிய நிலையுள்ளது.

இக் கிராமத்தில் உள்ள குடும்பங் களுக்கு மலசலகூடம் அமைத்து கொடுக்கப்படவில்லை.

இக்கிராமத்தில் உள்ள கூடுத லான குடும்பங்கள் கடற்றொழி லையே தமது வாழ்வாதார தொழி லாக மேற்கொண்டு வருகின்ற நிலை யில் கடற்றொழில் உபகரணங்கள் எவையும் இவர்களுக்கு வழங் கப்படவில்லை.

மின்சாரம் வழங்கப்படாமை யால் மின்சாரத்தினூடாக செயற் படுத்தப்படும் அனைத்து செயற் பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகிறது.

ஏ-9 வீதியில் இருந்து இக் கிராமத்திற்கு செல்லும் 3 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாதுள்ள மையால் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி யுள்ளது. மழை காலத்தில் படகுகளி லேயே இவ் வீதியால் பயணம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை யும் உள்ளது.

எனவே, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர யார் முன்வருவார் கள்? என அப்பகுதி மக்கள் ஏக்கத்து டன் காத்திருக்கின்றனர். (ம-263)





# விதை நெல்லின் விலை அதிகரிப்பு; விவசாயிகள் திண்டாட்டம்

(புளியம்பொக்கணை)

கண்டாவளைபகுதியில் காலபோக விதைப்பு ஆரம்பமாகியுள்ள நிலை யில் நல்ல இன விதை நெல்லின் விலை விஷம் போல் ஏறியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள் ளனர்.

இதனால் தமக்கு தேவையான விதை நெல்லைப் பெறுவதில் பெரும் சிரமம் அடைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு பருவம் தப்பிய மழையால் பெரும்பாலான நெற் காணிகள் அழிவடைந்தமையாலும் முளைத்திறன் அற்ற நெல் கிடைத் தமையினாலுமே விதை நெல் லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது. (ம-263)



**டிப்பர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை யில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு 9.30 மணியளவில் ஊற்றுப் புல சந்தியில் இடம் பெற்றுள்ளது.**

# கட்டாக்காலிகளால் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று எல்லைக்குட்பட்ட பிரதேசங்க ளில் கட்டாக்காலிகள் அதிகமாக நடமாடுவதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் போக்குவரத்துச் செய் வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் இடம்பெறலாம் என பயணிகள் விசனம் தெரிவிக் கின்றனர்.

எனவே, இதற்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் சம்பந்தப் பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-267)

# பாம்புக்கடிக்கு இலக்கான பெண் வைத்தியசாலையில் அனுமதி

(கனகபுரம்)

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பின ராக தெரிவு செய்யப்பட்டுள்ளவரு மான குருகுலராஜாவின் மனைவி நேற்று முன்தினம் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

இதில் தர்மபுரம் புளியம்பொக்க ணையை சேர்ந்த குருகுலராஜா சித்திரா (வயது 60) என்பவரே பாம் புக்கடிக்கு இலக்காகி சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலைக்கு அனுப்பப்பட்டுள் ளார். (ம-259)

# உள்ளூர் உற்பத்திகளுக்கான இணையத்தளம்!





உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வவுனியா மாவட்டத்தில் இணையத்தள அங் குரார்ப்பண நிகழ்வு வவுனியா நெல்லி ஸ்டார் விடுதியில் கடந்த25 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

USAID,FOSDO ஆகிய நிறு வனங்களின் அனுசரணையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் உள்ளூர் உற்பத்திகள் தொடர்பான விபரங் களை வெளிப்படுத்தும் முகமாக இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன் இணை யத்தளத்தில் சென்று பார்ப்பது தொடர்பான கையேடும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இவ் இணையத்தில் உள்ளூர் உற்பத்திகளான விளக்குமாறு தயா ரித்தல், பனை பொருள் உற்பத்தி, மட் பாண்ட உற்பத்தி, நெசவு உற்பத்தி, பன்னவேலை, இழைநார் வேலை கள், பளிங்குரு உற்பத்தி, ஊதுவர்த்தி உற்பத்தி, நூல் ஆடைகள் உற்பத்தி என பலதரப்பட்ட உற்பத்திகள் தொடர் பாக கூறப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் USAID நிறு வனத்தின் சிரேஷ்ட அதிகாரி கிறிஸ் ரிமார்டின்ஸ், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.மேகநாதன், போஸ்டோ நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் செந்தில்குமரன், வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, வெண்கல செட்டிகுள பிரதேச செயலாளர் என்.கமலதா சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர். (ம-250)

# புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் அசௌகரியம்



(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தி யில் இருந்து ஓவசியர் சந்திவரை செல்லும் 5 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படாதுள்ளமை யால் பயணிகள் பெரும் சிரமங் களை எதிர்கொள்கின்றனர்.

இங்கு மீள்குடியேற்றம் செய் யப்பட்டகாலத்தில் இருந்து இன்று வரை இவ்வீதி புனரமைக்கப்பட வில்லை.

இதனால் மக்கள் பெரும் சிர மங்களுக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தினமும் சிரமங்களை அனுபவிக் கின்றனர்.

மேலும் பலநூற்றுக்கணக்கான பயணிகளும் சிரமப்படுகின்றனர்.

இவ் விடயத்தை துறைசார்ந்த அதி காரிகள் கவனத்தில் எடுத்து விரைந்து நடவடிக்கை எடுத்து உத வும் படி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத் துள்ளனர். (ம-263)

# புத்தர் சிலைகள் சேதம்

மன்னார் முருங்கன் புராதன ரஜமஹா விகாரையிலுள்ள புத்தர் சிலைகள் நான்கு உட்பட சுமார் ஆறு சிலைகள் இனந்தெரியாத நபர் களினால் நேற்றுமுன்தினம் வியா ழக்கிழமை அதிகாலை சேதமாக் கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் சம்பவம் தொடர் பில் இதுவரை யாரும் கைது செய் யப்படவில்லை எனவும் தெரிவித்த னர். (ம)

# நீர்த்தாங்கியிலிருந்து விழுந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதி

(கனகபுரம்)

நீர்த்தாங்கியில் இருந்து கீழே விழுந்த சிறுவன் கழுத்தில் படுகாய மடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறான்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் 5 மணியளவில் புதுமுறிப்பு கோணா வில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த த.சிலக்ஷன் (வயது 13) என்ற சிறுவனே படுகாயமடைந்து கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக் காக யாழ்போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளான். (ம-259)

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போது
மான அறிவில்லாத மூடர் செயலாகும்.
- ஃபிராங்கிளின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எழுதப்படும் தீர்ப்புகள் தீர்வாகி விடுவதில்லை

காணி அதிகாரம் மாகாண சபைகளுக்குக் கிடையாது. அந்த அதிகாரம் நாட்டின் ஜனாதிபதிக்கு உண்டு என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

காணி அதிகாரம் மாகாண சபைகளுக்குக் கிடையாது என்ற உச்ச நீதிமன்றின் தீர்ப்பு தமிழ் மக்களுக்கு சலனத்தை ஏற்படுத்தலாம். வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்த கையோடு, உச்ச நீதிமன்றின் தீர்ப்பு வெளியாகியிருப்பது தொடர்பில் சலனம் கொள்வது அவசியமற்றது.

உலகில் இறைவன் வழங்கும் தீர்ப்பைத் தவிர வேறு எந்தத் தீர்ப்புமே இறுதித்தீர்ப்பாகிவிட முடியாது. எனவே தீர்ப்புக்களை மாற்றி எழுதப்படவேண்டிய காலங்கள், தேவைகள் வரும்போது அவை தாமாகவே நடந்து கொள்ளும்.

எதுவாயினும் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர் கொள்ளும் சக்தி கொண்ட – உச்ச நீதிமன்றின் நீதியரசராக இருந்த ஒருவரை தமிழ் மக்கள் வடக்கின் முதலமைச்சராகத் தெரிவு செய்திருப்பதால், அவர் அதற்கான மாற்று மருந்தை நிச்சயம் பிரயோகிப்பார்.

உள்நாட்டில் உச்ச நீதிமன்றின் தீர்ப்புக் குறித்து சர்வதேசத்தின் முன் சுட்டிக்காட்டுகின்ற பொறுப்பை வடக்கு மாகாணத் தமிழ் அரசு எடுத்துக் கொள்ளும் என நம்பலாம்.

இது ஒருபுறம் இருக்க, கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழியை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போம்.

கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழியில் ஒரு திருத்தத்தை நம் சிற்றறிவுக்கு எட்டிய வகையில் செய்து கொள்வோம்.

கேடு நினைப்பவன் கெடுவான் என்பதே அந்தத் திருத்தம்.

கெடுகின்றவன் கேடு நினைப்பது என்பதைவிட, கேடுநினைப்பவன் கெடுவான் என்பது பொருத்துடையது.

அந்த வகையில் இலங்கை அரசு தமிழ் மக்கள் தொடர்பில் எடுத்து வருகிற மிக மோசமான நடவடிக்கைகள் இந்த நாட்டுக்குப் பேராபத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதையே உணர்த்தி நிற்கின்றது.

விடுதலைப்புலிகள் போராட்டம் நடத்திய காலத்தில் வடக்கிற்கு உணவுப் பொருள் முதல் அடிப்படைத் தேவைக்குரிய சவர்க்காரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வரை அனைத்துமே வடக்கிற்கு எடுத்துச் செல்வதற்கு தடைசெய்யப்பட்ட பொருளாக அறிவிக்கப்பட்டிருந்தன.

இதில் தேங்காயெண்ணைய், கற்பூரம் ஆகிய பூசைப்பொருட்களும் அடங்கும் என்பது சிந்திப்பதற்குரியன.

பொருளாதாரத் தடை என்ற அரசின் மிக மோசமான நடவடிக்கையால், ஒரு நேர உணவிற்காக பட்டலைந்த வாழ்வை தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிட மாட்டார்கள்.

விடுதலைப்புலிகளின் போராட்டத்தை முறியடிப்பதற்கான யுத்திகள் என்ற அடிப்படையில், பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் ஒவ்வொருநாளும் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் சட்டம் என எத்தனையோ அமுலாக்கப்பட்டது. என்ன செய்வது! போர் நடக்கும் பூமியில் இதற்கெல்லாம் நீதி கிடையாது என்று சகித்துக்கொண்டால் இப்போது யுத்தம் முடிந்தபின் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற நிட்டூரம் கொஞ்சமல்ல.

எத்தனையோ தீர்ப்புக்கள் எழுதப்பட்டாலும் இறுதித் தீர்ப்பு ஒன்று உண்டு. அதில் இருந்து யாருமே தப்பித்துக் கொள்ளமுடியாது என்ற தீர்ப்பை புரிந்து கொள்வது அவசியம்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது

## கனடா குற்றச்சாட்டு

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருவதாக கனடா குற்றம் சுமத்தியுள்ளது. பொதுநலவாய நாடுகள் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர் மாநாட்டில் பங்கேற்ற கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் 68-ம் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமாந்திரமாக இந்த மாநாடு நடைபெற்றது. கனேடிய அரசாங்கத்தின் இலங்கை குறித்த நிலைப்பாடு தெளிவானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்காத உறுப்பு நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். பாரிய யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக உரிய விசாரணைகள் இதுவரையில் நடத்தப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்கள் உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை. பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து, இலங்கை மனித உரிமைகளை மேம்படுத்த தவறினால் அமர்வுகளில் முழுமையான பங்களிப்பை வழங்க முடியாது என பிரதமர் ஸ்டீவன் ஹார்பர் ஏற்கெனவே தெரிவித்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பிரதமரின் இந்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் எதிர்பார்த்தளவு மாற்றங்கள் இதுவரையில் இடம்பெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான ஓர் பின்னணியில் கனடா, பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் முழுப் பங்களிப்பையும் வழங்குமா என்பது கேள்விக்குறியே என ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார். (செ-11)

# வேலூர் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தார் வைகோ

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன் பேரறிவாளன் மற்றும் சாந்தன் ஆகியோரை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று வேலூர் சிறையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேரறிவாளன் மற்றும் சாந்தன் ஆகியோர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நளினி ஆயுள் தண்டனைக் கைதியாக பெண்கள் சிறையில் உள்ளார்.

முருகன், பேரறிவாளன் மற்றும் சாந்தன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் கோரிக்கை விடுத்து வருகின்றது.

இந்நிலையில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு வேலூர் சிறைக்குச் சென்று முருகன், பேரறிவாளன் மற்றும் சாந்தனை சந்தித்து பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பின்னர் பெண்கள் சிறைக்குச் சென்று நளினியையும் சந்தித்து பேசினார்.

வேலூர் சிறையில் முருகன், பேரறிவாளன், சாந்தன் மற்றும் நளினி ஆகியோரை நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமானும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

# வர்த்தகர் சுட்டுக்கொலை

கொழும்பு புளுமெண்டல் பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகரான தெல் ராஜா என்பவர் இனந்தெரியாத நபரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், மோட்டார் சைக்கிளில் வந்த இருவருடன் தனது வீட்டுக்கு எதிரில் பேசிக்கொண்டிருந்த போது கார் ஒன்றில் வந்த ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த தெல் ராஜா கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கி சூடு நடத்தியவர் செலுத்திச் சென்ற கார் வத்தளை பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து அந்த நபர் காரை அங்குகைவிட்டுத்தப்பிச்சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

# முன்னாள் அமைச்சர் பேர்டி பிரேமலால் காலமானார்

வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்க கொழும்பில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலமானார்.

அவர் நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர். 59 வயதான திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் அமைச்சராக பணியாற்றியுள்ளார்.

இதனையடுத்து வடமத்திய மாகாண முதலமைச்சராக பதவியேற்ற அவர், மூன்று தடவைகள் அந்த பதவியை வகித்துள்ளார்.

கடந்த வடமத்திய மாகாண சபைத் தேர்தலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் இரண்டாம் இடத்திற்கு சென்ற காரணத்தினால் அவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படவில்லை.

பேர்டி பிரேமலால் திஸாநாயக்க, கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திஸநாயக்கவின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



துயரத்தை எதிர்கொள்ளும்போது துயரத்திலிருந்து தப்பி ஓடுவதைப் பற்றி தெளிவு தரவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் நீங்கள் அதைத்தான் எந்நேரமும் செய்து கொண்டிருக்கிறீர்கள். எப்போதெல்லாம் நீங்கள் நான் துயரப்படுகிறேன் என்று கூறுகிறீர்களோ அப்போது துயரத்திலிருந்து தப்பித்து ஓடிக்கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். ஏனென்றால் உங்களால் திரும்பிப் பார்த்து துயரத்தை எதிர்த்து நின்று அதில் மூழ்கி, அதைத் தழுவி, அதை நேசித்து, அதனுடன் இருந்து, முழுமையாக அதை ஏற்றுக் கொண்டு விடமுடிந்தால் அதைவிட இன்பம் வேறெதுவும் இல்லை. முதலில் இதை நீங்கள் செய்யுங்கள். பின்பு என்ன நிகழ்கிறது என்று பாருங்கள்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உலகத்துக்காக தியாகம் செய்!



➢ நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள்.

➢ ஒருவருக்கொருவர் நன்மை செய்வதன் மூலமாகத் தான் நற்பலன்களை அடையமுடியும்.

➢ மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கே செல்லவும் தயாராக இருக்க வேண் டும். மரணம் ஒருநாள் உறுதி என்னும் போது நல்ல செய லுக்காக உயிரை விடுவது மேலானது.

➢ பெரியவர்கள் பலர்செய்த தியாகத்தின் பயனையே இன்று மனிதகுலம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை உலகம் முழுவதிலும் காணமுடியும்.

➢ உன் சொந்த முக்திக்காக நீ உலகத்தை துறந்து விட விரும்பினால் அது ஒன்றும் பாராட்டத்தக்கது அல்ல. ஆனால் உலக நன்மைக்காக உன்னை நீயே தியாகம் செய்ய முடியுமானால் கடவுளாகி விடுவாய்.

➢ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பியோட முயற்சிக்காதே. வெற்றி,தோல்வி என்று கவனித்துக்கொண்டிருக்காதே. உடனடியாக தியாக உள்ளத்துடன் சேவையில் ஈடுபடு.

# இரண்டு கோடி ரூபாய் மோசடி செய்த பெண் கைது

வெளிநாட்டுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்த பெண்ணொருவர் ஹொரணை மினுவங்கொட பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரணை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் விஷேட குற்ற விசாரணை பிரிவினரால் இந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேச நபரான பெண், வெளிநாட்டில் தொழில் பெற்றுத் தருவதாக கூறி நாட்டின் பல பகுதிகளில் உள்ள நபர்களிடம் இருந்து இரண்டு கோடி ரூபாவிற்கும் மேல் பெற்று மோசடி செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவருக்கு எதிராக திருகோணமலை, அம்பாறை, மாத்தளை, பிலியந்தல, கொட்டாவ ஆகிய பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கைதுசெய்யப்பட்டபெண்ஹொரணை தலகல பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளதாகவும் ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# சென்னையிடம் வீழ்ந்தது ஹைதராபாத்

# ரசிகர்களை சிக்சர் மழையில் நனையவிட்டார் தோனி




சம்பியன்ஸ் லீக் ரி-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

தோனி, ஆட்டத்தின் கடைசி நேரத்தில் 8 சிக்ஸர்களை பொழிந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இதில் 18ஆவது ஓவரில் மட்டும் 5 சிக்ஸர்கள் அடங்கும்.

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட்டின் 10ஆவது ஆட்டம் ஜார்க் கண்ட் தலைநகர் ராஞ்சியில் வியாழக்கிழமை இரவு நடை பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. வழக்கம்போல் சென்னை அணியின் ஆட்டத்தில் முரளி விஜயும், ஹைத ராபாதின் பந்து வீச்சை ஸ்டெயினும் ஆரம்பித்தனர்.

எந்த வகையான கிரிக்கெட் போட்டியானாலும், பந்து களை வேகமாகவும், துல்லியமாகவும் வீசி பந்துவீச் சாளர்களை சீர்குலைக்கும் திறன் படைத்தவர் ஸ்டெயின்.

ஆட்டத்தின் 2ஆவது பந்திலேயே முரளி விஜயை, தனது 'ஸ்விங்' பந்துவீச்சில் ஸ்டெயின் வெளியேற்றினார். இதைத் தொடர்ந்து ஹசியுடன், ரெய்னா ஜோடி சேர்ந்தார்.

ரெய்னா, சரியான பந்துகளைத் தேர்வுசெய்து பவுண்டரி களுக்கு அடித்த வண்ணம் இருந்தார். 23 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஹசி ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து பத்ரிநாத் களமிறங்கினார். தொடர்ந்து களத்திலே நின்ற ரெய்னா 34 பந்துகளில் அரை சதம் கடந்தார். இந் நிலையில் 13 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பத்ரிநாத் ஆட்டமிழந்தார்.

### சிக்சர் மழை

அடுத்து களமிறங்கிய தோனி, ரெய்னாவுடன் ஜோடி சேர்ந்தார். சொந்த மாநிலத்தில் நடைபெற்ற போட்டியில் 15 ஓவரில் களமிறங்கிய தோனி, அடுத்த 2 ஓவர்களில் மெது வாக ஓட்டங்களைச் சேர்த்து வந்தார். ஆனால், திசாரே பெரேரா வீசிய 18ஆவது ஓவரில் தனது பழைய ஆட்டத் துக்கு தோனி திரும்பினார். அந்த ஓவரில் மட்டும் சென்னை அணிக்கு 34 ஓட்டங்கள் கிடைத்தன. இதனிடையே, 84 ஓட்டங்கள் எடுத்திருந்த ரெய்னா ஆட்டமிழந்தார்.

மறுபுறம் தனது அதிரடியை நிறுத்தாத தோனி, கடைசி ஓவரில் 2 சிக்ஸர்களை விரட்டி, ரசிகர்களை குளிர்மைப்படுத்தினர்.

இறுதியில் சென்னை அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்களை எடுத்தது. இறுதி வரை ஆட்டமிழக்காத தோனி 19 பந்துகளில் 63 ஓட்டங்களை எடுத்தார். ஹைதராபாத் தரப்பில் ஸ்டெயின் மற்றும் டுமினி தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு பார்தீவ் படேலும், அணித் தலைவர் தவனும் சிறப்பான தொடக் கத்தை ஏற்படுத்தித் தந்தனர். சிறப்பாக ஆடி வந்த படேல் 37 ஓட்டங்களிலும் தவன் 48 ஓட்டங்களிலும் வெளியேற, அந்த அணி சரிவுக்குள்ளானது. சிறப்பான தொடக்கத்தை வெற்றியாக, மற்ற வீரர்க ளால் மாற்ற முடியவில்லை. ஒருபுறும் விக்கெட்டுகள் வீழந்த போதும், மறுபுறம் சூறாவளியாக சுழல ஆரம்பித்தார் சமி. அவர், 25 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார். இதில் 2 சிக்ஸர்கள் அடங்கும்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்களை எடுத்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹைத ராபாத் அணி தோல் வியைத் தழுவியது. சென்னை தரப்பில் பிராவோ மற்றும் ஹோல்டர் தலா 2 விக் கெட்டுகளைக் கைப்பற்றி னர்.

# 'பாரதரத்னா' கிடைக்காததால் குமுறுகிறார் மல்யுத்த வீரர்

விளையாட்டு வீரர்களுக்கு நாட்டின் உயர்ந்த விருதான பாரத இரத்னா வழங்கப்படாது என்ற முடிவு தவறானது என்றும் இது மிக வும் ஏமாற்றமாக உள்ளது எனவும் மல்யுத்த வீரர் சுஷில் குமார் தெரிவித்தார்.

இந்தியாவின் சிறந்த குடிமகனுக்கு வழங்கப்படும் உயரிய விருது பாரத ரத்னா.

இது, சமூகத்தில் பல்வேறு துறைகளில் சாதித்தவர்களுக்கு மட்டும் தரப்படுகிறது. உலக கிரிக்கெட்டில் சதத்தில் சதம் அடித்து சாதித்தார் இந்தியாவின் சச்சின்.

இதனால், இவருக்கு பாரத ரத்னா தர வேண்டும் என்று பல தரப்பில் இருந்தும் கோரிக்கை எழுந்தது. இதனால், 2011, டிசம்பர் 16இல் விதிகளில் மாற்றம் செய்யப் பட்டு விளையாட்டு வீரர்களுக்கும் இவ்விருது வழங்கலாம் என்று மத்திய அரசு முடிவு செய்தது.

இதையடுத்து, கடந்த 1928, 1932, 1936 என்று மூன்று முறை ஒலிம்பிக் ஹொக்கியில் தங்கம் வென்ற ஜாம்பவான் தயான் சந்த்திற் குத் தான் முதலில் பாரத ரத்னா தரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

தவிர, 2008 ஒலிம்பிக் துப்பாக்கிசுடுதலில் தங்கம் வென்ற அபினவ் பிந்த்ரா ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற செஸ் வீரர் ஆனந்த்துக்கும் இவ்விருது வழங்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டது.

கடந்த 2013 யூலை 19இல் தயான் சந்த் திற்கு விருது தர மத்திய விளையாட்டு அமைச சகம் முடிவு செய்ததாக செய்தி வெளியானது.


இதனிடையே, பாரத ரத்னா நிலை குறித்து தகவல் அறியும் உரிமை (ஆர்.டி.ஐ.,) சட் டத்தின் கீழ் விளக்கம் கேட்கப்பட்டது.

இதில், விளையாட்டு வீரர்களுக்கு இந்த விருது தருவது என்ற விதிகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்று தெரி விக்கப்பட்டது.


இதனால் 2008, 2012 ஒலிம்பிக் மல்யுத் தத்தில் வெண்கலம், வெள்ளி வென்ற சுஷில குமார் ஆவேசம் அடைந்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், மத்திய அரசு இம்முடிவு எடுத்தது தவறானது. மிகவும் ஏமாற்றமாக உள்ளது.

தேசத்துக்காக இரத்தம், வேர்வை மற்றும் கண்ணீர் சிந்தி பெருமை சேர்க்கும் வீரர் களை இச்செயல் பெரிதும் காயப்படுத்தும் என்றும் எங்களுக்கும் பாரத ரத்னா விருது பெற தகுதி உள்ளது எனவும் கூறினார்.



# வருமானத்தில் சாதனை படைக்கிறார் கோலி



இந்திய கிரிக்கெட் விளையாட்டில் தனது திறமையால் உயர்ந்துவரும் விராட் கோலி விளம்பர வருமானங்களிலும் தொடர்ந்து உயர்நிலையை அடைந்து வருகின்றார்.

தனது தகுதிகளை வளர்த்து வரும் கோலி தனது தோற்றத்தாலும், அணுகு முறையா லும் ஆண்டுக்கு 10 கோடி வருமானம் தரக்கூடிய ஜேர்மனியின் மாபெரும் விளை யாட்டு நிறுவனமான அடிடாசின் விளம்பர ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளார்.

இதன்மூலம் இந்த நிறுவனத்தின் ஆடை கள் மற்றும் காலணிகள் விளம்பரங்களில் இன்னும் மூன்று வருடங்களுக்கு விராட் கோலி தோன்றுவார். எந்த இந்திய விளை யாட்டு வீரருக்கும் இது ஒரு இலாபகரமான வருமானம் ஆகும். அடிடாசின் விளம்பரங்க ளில் வரும் சச்சின் டெண்டுல்கர் தனது கிரிக் கெட் வாழ்வின் முடிவுக் காலத்தில் இருப்பது இந்த மாற்றத்தை ஏற்படுத்தி யிருக்கக் கூடும். எனினும் அந்நிறுவனத்தின் தகவல் தொடர்பாளர் இதுகுறித்து கருத்து எதுவும் கூறவில்லை.

இதுமட்டுமின்றி, சச்சின் டெண்டுல்கர், ஸ்டீவ் வா ஆகியோரை தங்களது நிறுவனத் தயாரிப்புகளின் விளம்பரத் தூதுவர்களாக கொண்டுள்ள பிரபல ரயர் நிறுவனம் ஒன்று 6.5 கோடிக்கு தற்போது விராட் கோலியை ஒப்பந்தம் செய்துள்ளதாகத் தகவல்கள் வெளி யாகி உள்ளன. இந்த வருட இறுதியில் 25 வயதினைப் பூர்த்தி செய்யும் விராட் கோலி யின் சென்ற வருட விளம்பர வருமானமே 40 கோடி எனத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது இந்தப் புதிய ஒப்பந்தங்களின் மூலம் அவர் இந்திய அணித் தலைவர் டோனி, சச்சின் வருமானங்களையே முந்தக் கூடும். ஏற்கனவே, பெப்சி, டொயோட்டா, சிந்தால் டியோடிரண்ட்ஸ் உள்ளிட்ட 13 நிறுவன விளம பரங்களில் விராட் கோலி தோன்றுகிறார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு விராட் கோலி நைக் அமெரிக்க நிறுவனத்துடன் ஐந்து வருட ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண் டார். ஆனால், இது சுமுகமாக இல்லாததி னால் இந்த நிறுவனம் கோலி தங்களுடைய ஒப்பந்தத்தை இடையில் மறுத்துள்ளதாக நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்தது. இதனை வசாரித்த கர்நாடக உயர் நீதிமன்றம், விராட கோலிக்கு ஆதரவான தீர்ப்பை வழங்கி, அவர் மற்ற விளையாட்டு நிறுவனங்களின் ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளலாம் என்று தீர்ப்பளித்தது.

# தலையாழி ஞானவைரவர் வி.க நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## குருநகர் கார்மேல் போய்ஸ் சம்பியன்



தலையாழி ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தினால் கோண்டாவில் ராமகிருஷ்ண மைதானத்தில் நடத்தப்பட்ட 48 அணிகள் மோதிக்கொண்ட 6 பேர் 6 பந்து பரிமாற்றம் கொண்ட மென்பந்து சுற்று போட்டி அண்மையில் இடம்பெற்றது.

முதலாவது அரையிறுதியில் கோண்டாவில் AB அணியை வீழ்த்தி குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டு கழகம் இறுதி.போட்டிக்கு முன்னேறியது.

இறுதிச்சுற்றில் வண்ணார் பண்ணை ஸ்ரீகாமாட்சி அணியுடன் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குருநகர் கார்மேல்போய்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுதாட முடிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல்போய்ஸ் விளையாட்டுக் கழகம் 5.5 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலகுகளையும் இழந்து 41 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் அதிக ஓட்டங்களாக அஜன் 22 ஓட்டங்களும், செல்டன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

42 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அணி இறுதி ஓவரில் 2 இலக்குகள் மீதமுள்ள நிலையில் 5 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இருந்தது.

ஆனால் பவீன்னுடை மிகச் சிறந்த பந்துவீசில் 2 ஓட்டத்தை மட்டும் பெற்றுக்கொண்டு 3 இலக்குகளை இழந்தது.

இறுதியில் வண்ணார்பண்ணை ஸ்ரீகாமாட்சி அணி 5.5 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஆட்ட நாயகனாக 22 ஓட்டங்கள் பெற்று ஒரு ஓவரும் வீசி 2 ஓட்டங்களை மட்டும் கொடுத்து ஒரு இலக்கையும் கைப்பற்றிய குருநகர் கார்மேல்போய்ஸ் விளையாட்டுக் கழக வீரர் அஜன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ஆட்ட நாயகனாகவும் குருநகர் கார்மேல்போய்ஸ் விளையாட்டுக்கழகத்தின் அஜன் அவர்களே தெரிவு செய்யப்பட்டார்

சிறந்த துடுபாட்டக்காரராக நொதேர்ன் அணியின் விதுசன் தெரிவு செய்யபட்டார்

சிறந்த பந்து வீச்சாளராக வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அணியின் நிசான் தெரிவு செய்யப்பட்டார்.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு 3 தகுதிகாண் போட்டிகளின் இறுதிப் போட்டி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு 3 இற்கான கிரிக்கெட் போட்டிக்கு யாழ்.நகரில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி , யாழ். சென்றல் அணிகள் மோதவுள்ளன.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணி சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு 3 இற்கான 2ஆவது சுற்றுக்கு தகுதி உடையவர்களாவர்.

மானிப்பாய் பரீஸ் அணி யாழ். நகரில் நடைபெற்ற தகுதிகாண் போட்டிகளில் 2ஆவது சுற்றில் சிறிகாமாட்சி அணியை 128 ஓட்டங்களாலும், கால் அரையிறுதிப் போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 68 ஓட்டங்களாலும் அரையிறுதிப் போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணியை ஒரு விக்கெட்டாலும் வெற்றி பெற்றுள்ளனர்.

யாழ்.சென்றல் அணி 2 ஆவது சுற்றில் நியூஸ்ரார் அணியை 121 ஓட்டங்களாலும் கால் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியை 3 விக்கெட்டுகளாலும் அரையிறுதிப் போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை 5 விக்கெட்டுகளாலும் வெற்றி பெற்றுள்ளனர்.

இவ்விரு அணிகளும் முதன் முறையாக யாழ்.நகரில் நடைபெற்ற தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றி தெரிவுப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.





## ஜனநாயக...

மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

நாட்டின் இறையாண்மை, ஐக்கியம் என்பவற்றை பாதுகாத்து கொண்டு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும்கடமை வடக்கு மாகாண சபைக்கு உள்ளது.

இது தொடர்பில் கவனத்துடன் செயற்பட வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது என்றார். (எ-11)

## மாவை...

கொட பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார்.

தமிழ் மக்களுக்கு சுய தீர்மானங்களை எடுக்கும் அரசு அவசியம் எனவும் சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு இருப்பதாகவும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என மனுதாரர் நீதிமன்றிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்மூலம் கூட்டமைப்பு இலங்கைக்குள் தனிநாட்டை உருவாக்க முயற்சித்தது என அறிவிக்குமாறும் அவர் உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை உணவட்டுன பிரதேசத்தை சேர்ந்த அருண லக்ஷித்த என்பவரும் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்திற்கு எதிராக மனு தாக்கல் செய்திருந்தார். (எ-11)

## மு.காங்கிரஸ்...

முஸ்லிம் காங்கிரசும் அரசாங்கத்திற்கு தேவையாகும். அதனால் அரசாங்கம் முஸ்லிம் காங்கிரசை வெளியில் போடாது.

இன்று இந்த நாட்டில் இனவாதம் தலை தூக்கியுள்ள நிலையில் பெரும்பான்மை சமூகம் பேரினவாதத்தை நோக்கி செல்கின்றன. அதனால் சிறுபான்மை சமூகங்களான தமிழ்-முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டும்.

வட மாகாணத்தில் நடந்து முடிந்த தேர்தலின் மூலம் தமிழ் மக்களின் ஒற்றுமை பலப்படுத்தப் பட்டுள்ளது. தமிழ்-முஸ்லிம் அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வு பற்றி பேசவேண்டும். அதன் மூலம் தீர்வொன்றை எட்ட முடியும்.

முஸ்லிம்களை புறந்தள்ளி விட்டு எந்த தீர்வையம் பெற்றுக் கொள்ள முடியாது என்றார்(எ-11)

## இலங்கை அர...

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானதும் சட்டம், ஒழுங்கு மற்றும பொதுநலவாயத்தின் மதிப்புகள், கொள்கைகளை நேரடியாக மீறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படுவதானது, மனித உரிமைகளுக்கு ஆதரவு வழங்குவது, ஜனநாயகத்தை ஸ்தாபிப்பது, அடிப்படை மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் 1991 ஹராரே பிரகடனம் குறித்து பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மனித உரிமை பிரச்சினைகள் சுட்டிக்காட்டி கடந்த 25ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்ட அறிக்கையானது, கொழும்பு மாநாட்டில் பொதுநலவாய மற்றும் அதன் உறுப்பு நாடுகள் பங்கேற்பது தொடர்பில் ஆபத்தையும் பெரும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மனித உரிமை பேரவையில் உரையாற்றிய மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் தொடர்பான அக்கறை மற்றும் இலங்கையின் ஆயுத மோதலில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான அல்லது பொறுப்புக் கூறும் விசாரணைகளை நடத்த தவறியுள்ளதாக கூறியிருந்தார்.

எனினும் பொதுநலவாய அமைச்சர்களின் செயற்பாட்டுக் குழு மற்றும் அந்த அமைப்பின் செயலகமே இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில் விவாதிக்க மறுத்து விட்டன.

மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையின் மோசமான நிலைமை தொடர்பாக குரல் எழுப்பியிருந்ததுடன் மோதலின் போதும் மோதலுக்கு பின்னரும் பிரச்சினைகளை பட்டியலிட்டிருந்தார்.

இது பொதுநலவாய அமைப்பின் மதிப்புகள் தொடர்பில் முரண்பாடான நிலைமையாகும் என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்தார்.

இதனால் பொதுநலவாய அமைபபும் அதன் தலைவர்களும் இலங்கையின் கடுமையான மனித உரிமை பிரச்சினைகளை புறந்தள்ளி விடக் கூடாது எனவும் அவர் கூறினார். (எ-11)

## தமிழக மீனவர்...

என்று அவர்களே ஒப்புக்கொண்டதையடுத்து, எல்லைமீறி பிரவேசித்த குற்றத்திற்காக அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்பட வேணடும் என்று இலங்கை அரச தரப்பு வழக்கறிஞர் விடுத்த கோரிக்கையை ஏற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் சிறிநிதி நந்தசேகரன் அந்தப் படகுகளைப் பறிமுதல் செய்து, அவற்றைப் பராமரிப்பதற்காக கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

இந்த வழக்கில் இந்திய மீனவர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களின் படகுகளை விரிவான விசாரணையின்றி பறிமுதல் செய்வது இயற்கை நீதியாகாது என்று அவர் வாதிட்டபோதிலும், அவருடைய வாதம் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

சட்டத்திற்கமைவாகவே அந்தப் படகுகள் அரசுடைமையாக்கப்படுவதாக நீதிமன்றம் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் மன்னார் கடற்பரப்பில் கடந்த யூன் மாதம் 7 ஆம் தேதி 21 மீனவர்களும், ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி 20 மீனவர்களுமாக மொத்தம் 41 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

இவர்கள் வியாழனன்று மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அப்போது, அவர்கள் தாங்கள் குற்றம் செய்யவில்லை என தெரிவித்திருந்ததாக அவர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி கயஸ் பெல்டானோ தெரிவித்தார்.

அவர்களை விடுதலை செய்த மன்னார் நீதிமன்றம் அவர்களது ஐந்து படகுகளுக்கும் உரிமை கோரும் விசாரணையை டிசம்பர் மாதம் முதல் வாரத்திற்கு ஒத்திவைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தப் படகுகளை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்து அவற்றைப் பாதுகாக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களினால் விளக்கமறியலில் வைக்கப்படுவதும், பின்னர் அவர்கள் படகுகளுடன் விடுதலை செய்வதுமே வழக்கமான நடவடிக்கைகளாக இடம் பெற்றுவந்துள்ளது.

ஆயினும் இப்போது இந்த நடைமுறையை மாற்றி, அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் படகுகளைப் பறிமுதல் செய்கின்ற நடவடிக்கைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-11)

**WANTED MANAGER**

We are registered with city & Guilds and Partners of British Council.

எமது நிறுவனத்திற்கு ஓர் முகாமையாளர் (பெண்) உடனடியாகத் தேவை. சம்பளம் ரூ. 10,000/- மேல் A/L வரை படித்திருக்க வேண்டும். CV யுடன் நேரில் வரவும்.

192- Navalar Road, Jaffna.
(4039) T.P : 0778803887

**பணியாளர் தேவை**

தொலைத்தொடர்பு நிலையத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாட்கள் தேவை. கணனி Typing செய்யக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும்.
9.00AM - 2.00 PM

**செல்வா ரெலி கொமினிக்கேசன்**
124, கோவில் வீதி,
(பொஸ்கோ பாடசாலைச் சந்தி யாழ்ப்பாணம்.
(4036)

**வீடு விற்பனைக்கு**

யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில், கஸ்தூரியார் வீதியில், வீடு விற்பனைக்கு உண்டு.
T.P : 0771912585 (4049)


## இனவாதம்...

தல் தொகுதியில் பண்டார நாயக்க குடும்பம் 80 ஆண்டுகள் அரசியல் நடத்தியது. தேர்தல் தொகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இன வன்முறைகள் வெடிக்கவில்லை. மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு முன்னாள்பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கனார். எனினும்தற்போது அந்தக்கட்சிக்கு வேறு சிலர் உரிமை கோருகின்றனர்.

இன முரண்பாடு களுக்குதீர்வுகாணப்பட வேண்டுமென்ற ஓர் நிலைமை உருவாகியுள்ள இந்த நிலையில், சிலர்மதமுரண்பாடுகளை தூண்டுவதில் ஆரவம்காட்டிவருகிறனர்.

நாட்டில் சிலர் இன வாதத்தை தூண்டும் சந்தர்ப்பத்திலும் அரசாங்கமும் பொலிஸாரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சிறுபான்மையினருக்கு எதிராக செயற்பட வேண்டும்என்றகாரணத திற்காக எனது தந்தை தனிச் சிங்கள சட்டத்தை அறிமுகம்செய்யவில்லை. சிலர் இதனை பிழையாக அர்த்தப்படுத்துகின்றனர்.

காலனித்துவ ஆட்சியாளர்களின் பிடியில் இருந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதே அவரின் நோக்கமாக அமைந்தது. அப்போதைய தமிழ்த் தலைமைகளும்தனிநாட்டைக்கோரவில்லை.

குறிப்பாக செல்வநாயகம் தனி நாட்டைக் கோரவில்லை. தமிழ் மொழிக்கு நியாயம் கிட்ட வேண்டுமெனவே கோரியிருந்தார். இதன் அடிப்படையிலேயே தமிழ்மொழி விசேட சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

13-ம் திருத்தச் சட்டத்தை திருத்த முடியாது இனவாதத்தை தூண்டி வருகின்றனர்என சந்திரிகா தெரிவித்துள்ளார். திஹாரியவில் நடைபெற்ற, பண்டாரநாயக்க நினைவு நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)


**தேவை/ Wanted**



We Need You. உங்களுக்கு விருப்பமா?
எங்களுடன் இணைந்து 40,000/- மேல் உழைக்க யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், நுவரெலியா, ஹட்டன் பிரதேசத்தினர் விரும்பத்தக்கது.
We will train you until you succeed vacancies.
- Management Trainee
- Customer Service
- Marketing
- Administrator

தகைமை: O/L or A/L. வயது 18-28 ஆண், பெண் இருபாலாரும். தங்குமிட வசதி இலவசம்.
We Need You.
அழைக்க : 0214993166, 0774455888 (4044)

**தற்போது யாழ் நகரில்...**



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

September Intake Now on
Leading to BSc (Hons) From UK

**Why** Choose **BCAS for QS & Civil Engineering ?**

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk (C-4936)

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

**ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014 வகுப்புகள் ஆரம்பமாகின்றன.**

| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
|---|---|
| அன்பொளி கல்வியகம், யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். | அன்பொளி கல்வி நிலையம், தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. |

அனுமதிகளை 28.09.2013 சனிக்கிழமையிலிருந்து 01.10.2013 செவ்வாய்க்கிழமை வரை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு : பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

"சின்னவிழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்."
- இயக்குநர்கள் -
(எ-4937)

**உணவு, இருப்பிடம், ரிக்கெட் இலவசம்**



டென்மார்க்கில் படிக்க 2 இலட்சம் வரை உழைக்க, 6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர் வந்து போகலாம்.
2 வருட விசா

கொலண்டில் (நெதர்லாந்தில்) படிக்க 2 இலட்சம் வரை உழைக்க.
2 வருட விசா

மலேசியாவில் படிக்க மாதம் 65000/- வரை உழைக்க வெறும் 3 இலட்சம் போதும்

அமெரிக்காவில் படிக்க 3 இலட்சம் உழைக்க 5 வருட, 10 வருட விசா

இத்தாலி சட்ட ரீதியாகச் செல்ல அரிய வாய்ப்பு (நிபந்தனைகளுக்கமைவாக)

கனடாவிற்கு விசிட் விசா பெற சட்ட ஆலோசனை.

IELTS இல்லாமலே நியூசிலாந்து Student Visa பெறலாம்.

7 நாட்களும் காலை 8.30 - பி.ப 6.00 மணிவரை

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4933)

**ESOFT டிப்ளோமாவிற்கு சர்வதேச (UK) தரச்சான்றிதழ்**

edexcel Assured Only @ ESOFT



- DiTEC INTERNATIONAL — Diploma in Information Technology
- DiWE — Diploma in Web Engineering
- DiE — Diploma in English
- DiSE — Diploma in Software Engineering
- DiBM — Diploma in Business Management
- DiCA — Diploma in Computerized Accounting

International Recognised Courses only @ ESOFT

36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்

SMS மேலதிக விபரங்களுக்கு to 077 990 56 11
<Fullname> space <Degree> spece <Address>

புதிய பிரிவுகள்
2013.09.30 காலை
2013.10.02 9:00 மணி
FREE Pendrive

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142 | 077 309 9 308
KILINOCHCHI BRANCH — 01, Kanagapuram Rd, Kili | 021 228 5444
NELLIADY BRANCH — 151, Jaffna Rd, Nelliady | 021 222 4940
(C-4934)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.